பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 10 திங்கட்கிழமை 27.03.2023 கதிர் 138

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இன்னும் வலுவானது; ஆபத்தானது

## இது நடைமுறைக்கு வந்தால் மொத்த அதிகாரமும் ஜனாதிபதியிடம்




அரசின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது ஏற்கனவே இருக்கும்பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட வலுவானது மிகப் பெரும் ஆபத்துக்களை கொண்டிருக்கிறதுஎன்று சோசலிசமுன்னணியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்களால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது மிகவும் மோசமான முறையில் ஜனநாயகத்தை மறுக்கின்ற தன்மையைக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட குடிமக்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்கு இந்தச் சட்டம் பல்வேறு ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.


இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டால்ஆட்சியாளருக்கு எதிரான எந்தவொரு நபரையும் கைது செய்யமுடியும். ஆட்சியாளர்களுக்கு எதிராகஎழுதுபவர்களை, விமர்சிப்பவர்களை சுவரொட்டிகள் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாணத்தில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடங்களை வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நியமிப்பது என்கிற கதை மீண்டும் ஒரு சுற்றுக் கிளம்பியுள்ளது. இதற்கு முன்னரும் இத்தகைய ஒரு செய்தி கிளப்பப்பட்டது. பின்னர் அது வடக்கு மாகாணதைச் சேர்ந்த 117 பேரே அவ்வாறு உள்வாங்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கானநேர்முகத் தேர்வும் கடந்த வாரம் நடந்து முடிந்தது.

வடக்கு மாகாணத்திலே பி.எல். 3 எனப்படும் சாதாரண தொழிலாளர் வெற்றிடங்கள்2,275உள்ளன. இதிலே1,275 வெற்றிடங்கள் உள்ளூராட்சி சபைகளில் காணப்படுகின்றன. இவ்வாறு உள்ளூராட்சி சபைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும்அதிகாரம்உள்ளூராட்சிசபைகளிடமே காணப்படுகின்றது. எஞ்சிய 1,275 வெற்றிடங்களும் மாகாண சபையின் ☞2

# ஆணையாளர்களின் ஆட்சி வேண்டாம் என நிபுண ரணவக்க போர்க்கொடி



உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆணையாளர்களின் ஆட்சி தேவையில்லை என்று ராஜபக்ஷவின் கடைசி சகோதரியான சந்தானி ராஜபக்ஷவின் புதல்வரும் பொது ஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நிபுண ரணவக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுஜனபெரமுனதேர்தலுக்குதயராகவே உள்ளது. எமது வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். நாம் தேர்தலைக் கண்டு அச்சப்படவில்லை.

அதேவேளை,எமக்குஆணையாளர்களின் அதிகாரத்தின் கீழான செயற்பாடுகள் தேவை ☞2

# அமைச்சர் பந்துல மறுப்பு



உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும், மாகாண சபைகள் தொடர்பில் விசேட குழுக்களை நியமிக்கும் தீர்மானத்தை இந்த ஆட்சி இன்னும் எடுக்கவில்லை என்ற அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமை ☞2

# இனப்பிரச்சினை தீர்வு குறித்து தமிழ் எம்.பிக்களுடன் பேச்சு

## நடத்துகிறார் என ஹவாட் பல்கலை நேர்கணாலில் ரணில் தெரிவிப்பு

* ஆரசியல் கைதிகளின் சட்ட சிக்கல்களுக்கு விரைந்து தீர்வு
* பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் உருவாக்கம்
* உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை
* பிராந்திய வலயத்தின் பாதுகாவலனாக இந்தியாவையே கருதுகின்றோம்
* அடுத்த 25 வருடங்களுக்குள் அபிவிருத்தியில் முன்னேற்றம்
* புலம்பெயர்ந்தோர் மற்றும் இளம் சமூகத்தினருக்கு அழைப்பு

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எமது ஆட்சியிலும், எதிர்க்கட்சியிலும் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹார்வட் பல்கலைக்கழகத்தின் ஏற் ☞2

# நாவலர் மண்டப தொல்லியல் திணைக்களமும் வெளியேறப் பணிப்பு.

யாழ்ப்பாணம், மார்.27

யாழ். நாவலர் மணி மண்டப வளாகத்தில் இருக்கும் தொல்பொருள் திணைக்களத்தினரை வெளியேறுமாறுவடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ☞2

# அரசியல் செய்யத் தெரியாதவரை இனி ஜனாதிபதியாக்க மாட்டோம்

## அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு

அரசியல் செய்யத் தெரியாத ஒருவரை இனி மேல் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்போவதில்லை என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பண்டாரவெலவில் பொது ஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தினைத் திறந்துவைக்கும்நிகழ்வில்ஞாயிற்றுக்கிழமை உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அரசியல்செய்யத்தெரியாத கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கிநாம்தவறைச்செய்துள்ளோம்.தவறு



இழைக்கப்பட்டதன்பின்னர்எமதுகட்சிக்குள்ளே அதுபற்றி ஆராய்ந்துள்ளோம். ☞2

# பதவி இழந்த தலைவர்களுக்கு ஆணைக்குழு இடமளிக்காது

உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயுட்காலம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் பதவிகளை இழந்த முன்னாள் தவிசாளர்களை விசேட ஆணையாளர்களாக நியமிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று தேர்தகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பதவிகளை இழந்துள்ள முன்னாள் ☞2

# போராட்டக்காரர்கள் யார் என்பதில் நாமலுக்குப் பிரச்சினைகள் உண்டு



போராட்டங்கள் தொடர்பில் எமக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை ஆனால்போராட்டக்காரர்கள் தொடாபில் எமக்கு பிரச்சினைகள் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

பண்டாரவெலவில் பொது ஜென பெரமுனவின் கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவினை வீழ்த்தவதற்கு பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இது மே ஒன்பதாம் திகதி நடைபெற்றவொரு ☞2

# கிளர்ச்சியாளர்களால் எம்மை முழுந்தாழிடச் செய்யமுடியாது

## இராஜங்க அமைச்சர் சனத் நிஷாந்த

குறுக்கு வழியில் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சி செய்பவர்களால் எம்மை முழுந்தாழிடச்செய்யமுடியாது என்று பொது ஜன பெரமுனவின் நீர்வழங்கல் இராஜங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில்நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுஉரையாற்றியஅவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மையாரும்முழந்தாளிடச் செய்ய முடியாது. எமக்கு வாக்குகளை வழங்கி ஆணையளித்த மக்களால் மட்டுமே அதனைச் செய்ய முடியும். அவர்கள் அடுத்த தேர்தலில்எமக்குவாக்குக ☞2



# அரசமைப்பு வெறும் கடதாசி நீதிமன்றம் வெறும் கட்டடம்

## இதுதான் இன்றைய நிலை என்கிறார் அனுரகுமார

நிறைவேற்று அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக அரசமைப்பு வெற்றுக் கடதாசியாகவும், நீதிமன்றம் வெறும் கட்டடத் தொகுதியாகவும் மாற்றப் பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமரா திஸா நாயக்க குற்றஞ் சாட்டினார்.

பானந்துறையில்ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றமக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவதது:

அதிகாரத்தை கைப்பற்றும் வரையில்தான் தேர்தல் என்பது முக்கியமான விடயமாக இருக்கும். ஜனாதிபதி ஆசனத்தில் ரணில் இப்போது அமர்ந்துள்ளார் அதனால் அவருக்குத் தேர்தல் தேவையில்லை.

இலங்கையின் அரசமைப் பினை ☞2



## வெடுக்குநாரி ஆலய துடைத்தழிப்பைத் தொடர்ந்து

# வடக்கு எல்லையில் மணற்கேணி சிவன் ஆலயமும் இடித்து அழிப்பு

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், மார்.27

நெடுங்கேணி வெடுக்குநாரி ஆதி சிவன் ஆலயத்தில் இருந்த இந்து மத அடையாளங்கள் அனைத்தும் துடைத் தழிக்கப்பட்ட நிலையில் வடக்கது எல்லைப் பகுதியான முல்லைத்தீவு மாவட்டம், மணற்கேணியில் இருந்த சிவன் ஆலயத்தின் விக்கிரகங்களும் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணி வெடுக்குநாரி சிவன் ஆலயம் உடைக்கப்பட்ட அதேநேரம் முல்லைத்தீவு மணற்கேணி சிவன் ஆலயமும் உடைக்கப்பட்டுள்ளமைநேற்றுஉறுதி செய்யப்பட்டது.

எல்லைக்கிராமங்களின் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் தமிழ் மக்களின் காவல் தெய்வங்காக இந்த ஆலயங்கள் இருந்து வந்துள்ளன. மிக நீண்ட காலமாகவே இங்கு மரபுவழி படையல் வழிபாடுகளில் தமிழர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

அவ்வாறு எல்லைக் கிராமங்களில்உள்ளஇந்துமத அடையாளங்களேதிட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. வடக்கு எல்லைகளிலும்பௌத்த ☞2

# வெடுக்குநாறி ஆலயம் பெயர்தழிப்பை கண்டித்து யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

## சைவ அமைப்புகள் ஞாயிறன்று நடத்தின

வவுனியா - வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி சிவன் ஆலயம் உடைக்கப்பட்டு, அங்கிருந்த கடவுளர் விக்கிரகங்கள் எல்லாம் அகற்றப்பட்டு, இந்து மத அடையாளங்கள் துடைத்தளிக்கப்பட்டதை எதிர்த்து ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் காணப்படுகின்றன.

இதற்கிடையில் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், கிராமப்புறங்களில் உள்ளவறிய குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்தோடுதேசியசெயலணிஒன்று உருவாக்கப்பட்டது. அதில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் இளைஞர்கள்தெரிவுசெய்யப்பட்டார்கள். அவர்களுக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்கி, அரச மற்றும் தனியார் தேவைகளுக்கான சிறப்புத் தேர்ச்சி ஆளணியாக அவர்களைப் பயன்படுத்துவது என்று திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கான ஆட்களைத் தெரிவுசெய்யும்பணிவழக்கம் போலவேகோட்டாபயவினால் படையினரிடம்தான் ஒப்படைக்கப்பட்டது. அப்படி அவர்கள் தேர்வு செய்து வழங்கிய பெயர்ப்பட்டியலில் இருந்து நியமனங்கள் வழங்கப்பட்டபோது வடக்கில் மிகச்சொற்பமானவர்களுக்கே நியமனங்கள்வழங்கப்பட்டன. ஏனைய மாவட்டங்களில் பெருமளவானோருக்கு நியனங்கள் வழங்கப்பட்ட போதும் வடக்கில் அது வெட்டிக் குறைக்கப்பட்டது. இது தொடர்பில் அப்போது- ஆட்சியாளர்களுடன் இருந்தவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் ராமநாதன் ஆகியோர் குரல் கொடுத்தபோதும் ஆட்சியாளர்கள் அதனைக் கால்த் தூசுக்கும் மதிக்கவில்லை. 117 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டது.

இப்போதுகோட்டாபயவும் இல்லை அவர் உருவாக்கிய செயலணிக்கு மரியாதையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் அதனைக் கலைப்பது என்று ஆட்சியாளர்கள் முடிவு செய்துவிட்டனர். அதனால் அதிலிருப்பவர்களை மாகாண மற்றும் உள்ளூராட்சிசேவைகளுக்கு அந்தந்த மாகாணங்களில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையிலேயே வடக்கிலும் அந்த 117 பேரையும் மாகாண நிர்வாகத்திற்குள் உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

அதேபோன்று சப்பிரகமுவா மற்றும் ஊவா மாகாணங்களிலும் இருந்த வெற்றிடங்களுக்குள் அத்தகையவர்களால் நிரப்பப்பட்டன. ஆனால் அங்கெல்லாம் இத்தகைய வெற்றிடங்களை உள்ளூர் அரசியல்வாதிகளே உடனுக்குடன் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி நிரப்பி விடுவதால் இருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இப்போது வெற்றிடங்களை நிரப்பியது போக 427 பேர் வெளியே நிற்கின்றார்கள்.

வடக்கில் இன்னும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருக்கின்றன. அண்மையில் கொழும்பில் உள்ள பொது நிர்வாக அமைச்சினால் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் இந்த 427 பேரையும் வடக்கு ஆளணிக்குள் இருக்கும் வெற்றிடங்களுக்கு நிரப்பிக் கொள்ள முடியுமா என்று கேட்கப்பட்டுள்ளது. பிரதம செயலாளரின் பதில் என்னவாக அமைந்தது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், அவரும் ஒரு சிங்களவர் என்கிற அடிப்படையில் அந்த நியமனங்களுக்கு ஆமாம் போட்டுவிடுவார் , எதுவானாலும் கொழும்பு ஆட்சிக்கு சார்பாக நடப்பதே தன் தலையாய பணி என்று நினைக்கக்கூடிய ஆளுநரும் கூடவே இருப்பதால் அது நடந்துவிடக்கூடும் என்கிற அச்சம் எழுந்துள்ளது. அதுவே இப்போது வேறு மாகாணக்காரர்களை வடக்கில் நியமனம் செய்ய இரகசிய முயற்சி என்பதாக வெளிவந்துள்ளது. உண்மையில் அப்படியொருமுயற்சி நடந்ததாக நடப்பதாகத் தகவலில்லை. அதற்குச் சாத்தியம் இருக்கிறதா என்றே கேட்கப்பட்டுள்ளது. ஆனால் இனி நடக்காது என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை.

அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை மேற்கோள்காட்டி ஒரு செய்தி இணையத்தளங்களில்வெளியாகியது. அதைப் பார்த்து உள்ளூர்பத்திரிகைகள்சிலவும் பின்னர் அந்தச் செய்தியைப் பிரதி பண்ணின.

"இது வடக்கு மாகாண இளைஞர்களிற்குக் கிடைக்க வேண்டிய உரித்து அதனைத் தட்டிப் பறிக்க நினைக்கும் ஒருவரே ஆளுநராக இருப்பது வேதனையளிக்கின்றது. இதனைவடக்குமாகாணத்தை சேர்ந்த இளைஞர்களிற்கு பெற்றுக் கொடுக்க ஆளுநர் முன் வர வேண்டும் மாறாக வெளியில் இருந்து நியமித்து இங்குள்ள இளைர்களை விரத்திக்குள் தள்ளக்கூடாது என்பதோடு மாகாண சபையில் உருவாக்கப்பட்ட பிரமாணத்திற்கு அமைய அது வடக்கு மக்களிற்கு உரித்தானதாக இருப்பதனால் எம்மை மீண்டும் நீதிமன்றை நாடும் சூழலிற்கு தள்ள வேண்டாம்" என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்று அந்தச் செய்திகள் கூறின.

அதற்கு வடக்கு ஆளுநர் மறுப்புத் தெரிவித்திருக்கிறார் என்றும் அவ்வாறு வெளி மாநிலத்தவர்களை நியமிக்கும் நடவடிக்கை எதுவும் இல்லை என்றும் வடக்கு மாகாணத்தவர்களே அந்த வெற்றிடங்களுக்கு நிரப்பப்படுவார்கள் என்றும் ஆளுநர் தெரிவித்தார் என்றும் அதே இணையத்தளங்களில் நேற்று செய்திகளும் வெளியாகி இருந்தன.

எல்லாம் சரி, இப்போது வெளி மாகாணக்காரர்கள் நியமிக்கப்படப்போகிறார்கள் என்று குய்யோ முறையோ என்று குழறும் அரசியல்வாதிகளும் தமிழ் இளைஞர்களின் உரித்து என்று கூக்குரலிடுவோரும், இத்தனை ஆண்டுகளாக அந்த வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணக்காரர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதை ஏன் அனுமதித்தார்கள்? பிரதேச சபைகளும் மாகாண சபையும் இருக்கும்போதே அவற்றை நிரப்பி இருந்தால் இப்போது வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டது போல அல்லாடத் தேவையில்லையே! இடம் கொடுத்தால் மடம் பிடுங்கும் கொழும்பு இருக்கிறது என்று தெரிந்து கொண்டும் இவர்கள் ஏன் இடம் கொடுத்தார்கள்?

நமது அரசியல்லட்சணம் என்று சலித்துக்கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் வாசகர்களே!

**இடிமின்னல்**

## பதவி இழந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளர்களை உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படு வதாக தகவல்கள்வெளியாகியுள்ளன.

அதன் ஓர் அங்கமாகவே பிரதமர்தினேஷ்குணவர்த்தன தலைமையில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் அவ்விடயம் தொடர்பில் கரிசனைகளைக் கொண்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. அவ்வாறு பதவிகளை இழந்தவர்கள் மற்றும் வேட்பாளர்களாக இருப்பவர்களை நியமிப்பதானது உள்ளூராட்சி மன்றங்களின் சுயாதீனத் தன்மையை கேள்விக்குள்ளாக்கும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டிள்ளது.

## ஆணையாளர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை. அவர்களின் ஆட்சி தேவையில்லை. உள்ளூராட்சி மன்றங்களில்கடந்தகாலத்தில் பதவியில் இருந்த எமது தவிசாளர்கள் நன்றாகவே செயற்பட்டுள்ளார்கள்.

ஆகவே தேர்தல் நடைபெற்றால் அவர்களின் அதியுச்சமான மக்கள் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

## இனப்பிரச்சினை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டில் மார்ச் 24 நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாகக் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரவித்ததாவது:

இலங்கைஅந்நேரத்திலும் அரசியல் உறுதிப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்ளும் அதேநேரம் மிகப்பெரிய பொருளாதார குழுவொன்றுடன் முன்னோக்கி பயணிக்க எதிர்பார்க்கிறது. இலங்கை அடுத்த 25 வருடங்களுக்குள் இந்து சமுத்திரத்தின்ஏனையநாடுகள் மற்றும் தெற்காசியாவுடன் இணைந்து பயணித்து மிகப்பெரிய அபிவிருத்தி இலக்குகளை அடையும்.

இந்த, 25 வருடகால புதியமறுசீரமைப்புவேலைத் திட்டத்தின் இலக்குகளை நோக்கிஎமது ஆட்சி நாட்டைக் கொண்டுச்செல்லும். நாட்டை முன்னேற்றுவதற்கான தொடர்ச்சியான வேலைத் திட்டங்களில் புலம்பெயர் மற்று இந் நாட்டின் இளம் சமுதாயத்தினர் இணைந்துகொள்ள வேண்டும்.

காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 100 வருடங்கள் பூர்த்தி ஆகின்ற 2048 ஆம் ஆண்டில் இலங்கைநடுத்தரவருமானம் ஈட்டும்நாடாக மாறும். அவை அனைத்தும் பொருளாதார மறுசீரமைப்புக்கான அர் பணிப்பிலேயேதங்கியுள்ளது. அதற்காக நமது மூலோபாய அமைவிடத்தைபயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாம் பலமான ஜனநாயகக் கட்டமைப்பினையும் திறந்தபொருளாதாரத்தையும் கொண்டுள்ள சிறியதொரு நாடு என்ற வகையில் அரசியல் உறுதிப்பாட்டைப் பேணும் அதேநேரம் எமது அயல்நாடும் நீண்ட கால உறவைப் பேணிவரும் நாடுமான இந்தியாவை வலயத்தின்பாதுகாவலனாகக் கருதுகிறோம்.

பழமையான பொருளாதாரக் கொள்கைகளுடன் புத்துயிர் பெற்றுவருகின்ற ஆசிய வலயம் மற்றும் இந்தியாவின் அபிவிருத்திச் செயற்பாடுகளோடுகைகோர்த்துக்கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணிகளில் இலங்கை முன்நின்று செயற்படுகிறது.

இந்தியாவுடன் காணப்படுகின்ற சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தமாக மாற்றியமைத்துக்கொள்வது சிறந்தது. ஆசியாவின மீக நீண்டபொருளாதாரகூட்டிணைவுடன் பொருளாதார ஒப்பந்தங்களை கைசாத்திடுவதால்உலகின்மிகப்பெரிய பொருளாதார குழுவுடன் முன்னோக்கிச்செல்வதற்கான வாய்ப்பு கிட்டவுள்ளது.

அடுத்த 25 வருடங்களுக்குள் செழிப்பான மற்றும் வலுவான நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள சமூக பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு, செல்வதந்த நாடுகளின் மோதல் இலங்கைக்கு திறக்கப்படவுள்ள இந்திய மற்றும் ஆபிரிக்க வலயத்தின் பொருளாதார சந்தை வாய்ப்புக்களுக்கு தடையாக அமையாது.

இலங்கையின் இன வேறுபாட்டு பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண்பதற்காக அனைத்து இனமக்களுக்கும் சம மதிப்பு மற்றும் வளங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அரசு புரிந்துகொண்டுள்ளது. உள்ளகப்பேச்சு, நெருக்கமான புரிந்துணர்வு மற்றும் இனக் குழுக்கள் இடையிலான பல்வகைத் தன்மையைப் புரிந்துகொள்வதன் மூலம் தேசிய ஒற்றுமையை மேம்படுத்த முடியும்.

இனரீதியான வேறுபாடுகளுக்குத் தீர்வினைக் காண்பதற்காக ஆளும், எதிர்த் தரப்பில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்துவருகின்றேன்.

பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய தமிழ்க் கைதிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அது தொடர்பில் காணப்படும் சட்ட விடயங்களைத் துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்தல், தேசிய காணி ஆணைக் குழுவை அரசியலமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தல், வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்குதல், அதிகாரப்பகிர்வு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைக்கு அமை வாக அவற்றை நடைமுறைப் படுத்தல் ஆகிய விடயங்களை நாம் முன்னெடுக்கும் செயற்றிட்டத்தின் சில நடவடிக்கைகளாகச் சுட்டிக்காட்ட முடியும். இதனைத் தவிரவும், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தினை உருவாக்கவும், உண்மைமற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கவும் சட்டவாக்கங்களை வாகுத்து வருகின்றோம் - என்றார்.

## அரசியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து எதிர்வரும காலத்தில் அரசியல் செய்யத் தெரியாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு நாம் வந்துள்ளோம்" - என்றார்.

## வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத அடையாளங்களை நிறுவி வடக்கு கிழக்கு இடையிலான நிலத் தொடர்பை அறுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றுஎல்லைக்கிராமத்தமிழ் மக்கள்குற்றஞ்சாட்டுகிறார்கள்.

வடக்கு மாகாண எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழர்களின் பூர்வீக சைவ வழிபாட்டு அடையாளங்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு அரச திணைக்களங்களால் காணாமலாக்கப்படுவதாக வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம்நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தின் அனைத்து விக்கிரகங்களும் துடைதத்து அழிக்கப்பட்டதை நேற்றைய தினம் அங்கு நேரில் சென்று பார்த்துஉறுதிப்படுத்தியவர்கள் அது குறித்து உடன உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன் இதற்குரிய அடுத்த கட்ட வழிமுறைதொடர்பில்நாளை ஆராயப்படவுள்ளது.

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுபவர்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யவதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கின்றது.

அவ்வாறுகைதுசெய்யப் படும்ஒருவரைஆடைகளைக் களைந்து விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரத்தை சதாரண உதவி பொலிஸ் ஆய்வாளருக்கே (சப் இன்ஸ்பெக்டர்) ஒருவருக்கே வழங்குகின்றது. அத்துடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்த நபரை மூன்று மாதங்கள் வரையில் தமது காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த முடியும்.

பின்னர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்படுகின்றபோது விசாரணைமுடிவடியவிலலை பிணை வழங்க முடியாது என்று சட்டமா அதிபர் ஊடாக மறுதலிக்கவும்முடியும். இந்த அதிகாரங்கள் அனைத்துமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடத்திலேயே குவிக்கப்படவுள்ளது.

அவ்வாறன நிலைமை ஏற்பட்டால் 20 வருடங்களுக்கு ஆட்சிக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடப்போவதில்லை என்று எழுத்து மூலமான ஒப்புதல் அளித்தால் சட்டமா அதிபர் வழக்கு தொடர்வதை மீள் பரிசீலனை செய்ய முடியும்.

ஆகவேபுதியபயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது, தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் வலுவானது. அதன் மூலம் நிறைவேற்றுஅதிகாரமுறைய ஜனாதிபதி தான் விரும்பாத அமைப்புக்களைத் தடை செய்யமுடியும்.

இறுதியில் அமைப்புக்களை தடைசெய்து அதில் உள்ள உறுப்பினர்களைப் பயங்கரவாதிகள் என்று பெயரிடமுடியும். இறுதியில் இந்த விடயம் சம்பந்தமாக யாரிடம் மேன்முறையீடு செய்வது யாரிடம் சென்று கேட்பது என்பதற்காக ஜனாதிபதியால் மூன்றுபேர் நியமிக்கப்படுவர்.

ஆகவேஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது இங்கு இறைவேற்று அதிகாரமே பயன்படுத்தப்படுகின்றது. தற்போது நீதிமன்றத்திடம் உள்ள அதிகாரங்கள்கூட நிறைவேற்றுஅதிகாரத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சட்டம் அமுலாக்கப்படுகின்றபோது பிரான்ஸ்புரட்சிக்குமுன்னதாக உலகம்இருந்தநிலைமைக்கு நாடு தள்ளப்படவுள்ளது. ஆகவேஇதனைத்தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

## போராட்டக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமன்று. குறித்த செயற்பாடு ஏப்ரல் மாதத்திலிருந்தே தொடங்கிவிட்டது.

எமக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பில் எமக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால் போராட்டங்களை மேற்கொள்பவர்கள்தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன.

அவர்கள் அதிகாரத்தினைக் குறுக்கு வழியில் கைப்பற்றமுனைகின்றார்கள். நாம் அதற்கு இடமளிக்க முடியாது - என்றார்.

## கிளர்ச்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க முடியாது என்று கூறி நிராகரிப்பார்களாக இருந்தால் நாம் வீடுகளுக்கச் செல்லத் தயராகவே உள்ளோம்.

அதைவிடுத்து, மக்கள் ஆணையளித்த பின்னர் குறுக்கவழியில்அதிகாரத்தைப் பெறுபவதற்காக கிளர்ச்சி செய்பவர்களுக்காக எமது பதவிகளை துறந்துவிட்டுச் செல்ல முடியாது.

நாம் மக்கள் சேவைகளைச் செய்துள்ளோம். பதவிகளைதுறக்கக்கூறுபவர்கள் இதுவரையில்மக்கள்ஆணை பெறாதவர்களாக உள்ளனர் - என்றார்.

## அமைச்சர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

"உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் தொடர்பில் ஆட்சியாளர்கள் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. விசேடகுழுக்களுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அவ்விதமான தீர்மானங்களை நாம் எடுக்கவில்லை. ஆகவே, இல்லாதவொரு விடயத்தினை மையப்படுத்தி புதியசெய்திகளை உருவாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார்.

## அரசமைப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்பற்ற வேண்டும் என்று கூறுகின்ற ரணில் விக்ரமசிங்க இப்பொழுது தானே அதைப் பின்பற்றுவதில்லை. அரசமைப்பில் தேர்தல் உரியகாலத்தில் நடத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால்அதனைநிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி பின்பற்றவில்லை.

இந்த நிலமையைப் பார்க்கின்றபொழுது அரசமைப்புக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கு இடையில் முரண்பாடுகள் உள்ளமை அம்பலமாகின்றது.

அரசமைப்பின்பயனற்ற தன்மை இங்கு வெளிப்படுகின்றது. ஆகவே சட்டத்துக்கு எப்போது வரை மதிப்பளிப்பார்கள் என்ற கேள்வி எழுகிறது. அவர்களின் அதிகாரம் நீதிமன்றத்தின் ஊடாக காப்பாற்றப்பட்டபோது சட்டத்தை மதிப்பதாகக் கூறினார்கள்.

தற்போதைய நிலையில் தேர்தல் அவர்களின் அதிகாரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். ஆகவே அவர்கள் அரசமைப்பையும் தமது அதிகாரத்திற்கு அச்சுறுத்தலான விடயமாகவே பார்க் கின்றார்கள். ஆகவே அரசமைப்பு தற்பொழுது வெற்றுக்கடதாசியாகிஉள்ளது.

அதேபோன்றுஏற்கனவே ரணில் பிரதமராக இருந்த காலத்தில் அதிகாரத்தை பாதுகாக்கின்றசெயற்பாட்டை முன்னெடுத்த நீதிமன்றம் அப்போது உயர்ந்தது என்று தெரிவித்தார்கள். தற்பொழுது நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துவதால் அதன் மீது வெறுப்பு காண்பிக்கப்படுகின்றது. நீதிமன்றம் வெறும் கட்டட தொகுதியாகக் கருதப்படுகின்றது.

இந்த நிலமைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? வழமையாக அதிகாரத்தில் இருந்தவர்கள் மாறிமாறி தமக்குள் ஆட்சிப்பீடத்தினை மாற்றிக்கொண்டார்கள். ஆனால் இம்முறை அதிகாரம் மக்கள் கைக்குச் செல்லப் போகின்றது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். அதனால்அவர்களுக்குஅச்சம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் கைக்கு அதிகாரம் செல்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தமக்குள்ளேயே அதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கின்றார்கள். இதுதான் உண்மையான விடயம் -என்றார்.

## வெடுக்குநாறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் சைவ அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் மாலை 5.30 மணியளவில் ஒன்று கூடிய சைவஅமைப்பின்பிரதிநிதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்துக்கல்லூரியில் நடந்த சமயம்சார் நிகழ்வு ஒன்றில்கலந்துகொண்டுவிட்டு வந்த இவர்கள் அப்படியே ஆர்ப்பாட்டத்திலும்ஈடுபட்டனர்.

வெடுக்குநாறி எங்கள் சொத்து, வெடுக்குநாறியில் உடைத்த ஆதி லிங்கத்தை மீள அதேயிடத்தில் வை, வெடுக்குநாறியில்ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையைக் கண்டிக்கிறோம் என்று அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

## நாவலர் .....

பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். நல்லூர் நாவலர் மணிமண்டபம்அமைந்துள்ள காணி இந்து கலாசாரத் திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படுவதால் அவர்களிடம் அதனைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை வடக்கு ஆளுநர்துரிதப்படுத்தியுள்ளார். இதற்கமைய அம்மட்டபத்தை இதுவரை பராமரிக்கும் யாழ்ப்பாணம மாநகர சபையை எதிர் வரும் 6ஆம் திகதிக்கு முன்பு அங்கிருந்து அதனது உடமைகளுடன் வெளியேற வேண்டும் என்று ஆளுநர எழுத்தில் அறிவித்திருந்தார். தற்போது அதே வளாகத்தில் உள்ள தொல்பொருள் திணைக்களத்தையும் மூடை முடிச்சுக்களுடன் அங்கிருந்துவெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.







காலைக்கதிர் Kalaikkathir

# மத்திய வங்கியை சுயாதீனமாக மாற்றும் செயற்பாடு அரசைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமாக அமையும்

## வேலுகுமார் எம்.பி கூறுகிறார்

நாட்டின்சுயாதீனஆணைக் குழுக்கள்வலுவிழந்துள்ளன. அதன் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கைகளில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. தற்போது மத்திய வங்கியையும் சுயாதீனமாக மாற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. எதிர்காலத்தில் மத்திய வங்கியும் சுயாதீனமாக மாற்றப்படுமாயின். நிச்சயம் அது அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமாகவே அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டி, நாவலப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

இன்று நாட்டில் காணப்படுகின்ற சுயாதீன ஆணைக் குழுக்கள் ஜனாதிபதி கைகளில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன. நாட்டுக் கும், சர்வதேசத்துக்கும் தெரியும், நாட்டின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின்நிலைமை எவ்வாறு உள்ளதென்பது.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கை மத்திய வங்கியை சுயாதீனமாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலைக்கும், பொருளாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்துவங்குரோத்து நிலைக்கு நாடுசெல்வதற்கும் இலங்கை மத்திய வங்கியை முகாமை செய்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நண்பர் அர்ஜுன் மகேந்திரன் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறான ஆளுநர்களின் செயற்பாடுகள், பிழையான கொள்கைகள், பிழையானவழிமுறைகளால்தான் இந்த மோசமான நிலைக்கு நாடும், நாட்டு மக்களும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தவும், சரியான முறையில் நடைமுறைப்படுத்தவும்அரசாங்கம் நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

அதனைவிடுத்து மத்திய வங்கியை சுயாதீனமாக மாற்றுகின்றோம்என்றுகூறுகிற வகையில், அதிலிருக்கும் ஆளுநராகஇருக்கலாம்அல்லது நிர்வாக சபையாக இருக்கலாம்... அதன் அங்கத்தவர்களைநியமிக்கும்போது, அது அரசியல் நியமனமாக அமையும்.

மேலும், ஜனாதிபதி உள்ளிட்டஅரசாங்கம்இதனை மேற்கொள்ளுமாயின், அங்கு இருக்கும் வேலைத்திட்டம் அரசாங்கத்தைக்காப்பாற்றும் வேலைத்திட்டமாகவே கருதப்படும். இவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சரியானதொரு வழிமுறையல்ல. – என்றார்.

# ஏப்ரல் 29 காங்கேசன்துறைக்கு முதல் பயணிகள் கப்பல் வரும்

## 144 மில்லின் ரூபா செலவில் முனையம நிர்மாணப்பணிகள் தீவிரம்

இந்தியாவின் பாண்டிச்சேரி காரைக்கால் துறைமுகத்தில்இருந்துகாங்கேசன்துறை துறைமுகத்துக்கு முதல் பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் 29 வருகை தருவதற்கு உள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

பயணிகள்படகுச்சேவையினை ஆரம்பிப்பது தொடர்பான தரப்புடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் நிமல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

இந்தச் சேவையினை ஆரம்பிக்கும்போதுகாங்கேசன் துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் கீழ் புதிய பயணிகள் முனையம் நிர்மாணிக்கப்படுகிறது. இதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை 144 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொடுத்துள்ளதுடன் அதன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்படுகிறது.

தற்போது இலங்கை கடற்படையினரால் முனையத்தின் தொடக்க நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு ஏப்ரல் மாதம் 2ஆவது வாரத்துக்குள் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இலங்கை துறைமுகஅதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தக் கப்பல் சேவை தொடங்கப்பட்டபின்னர் இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள எந்தவொரு வியாபாரிக்கும் இந்த சேவையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இச்சேவைக்கு மேலதிகமாக காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவாக்கும் நடவடிக்கைகளும் தொடங்கப்படவுள்ளன. இதற்காகத் தற்போது இந்திய அரசினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை போதுமானதாக இல்லை என்பதால் இன்னும் 16 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை இந்திய எக்சிம்வங்கியிடமிருந்துகோரப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பயணிகள் படகு உரிமையாளர்கள் ஒரு பயண வழிக்கு பிரயாணி ஒருவரிடம் 50 டொலர்கள் அறவிடுவதுடன் 100 கிலோ கிராம் பொருட்களை கொண்டு செல்ல முடியும் என்று குறிப்பிட்டனர்.

கப்பல் சேவையினூடாக ஒரு தடவைக்கு 150 பயணிகளை கொண்டு செல்ல முடியும் என்றும் காரைக்கால் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகம் வரைபயணிப்பதற்கு 4 மணித்தியாலங்கள் எடுப்பதுடன், முதலில் பகல் வேளையில் மட்டுமே பயணச் செயற்பாடுகளை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

# கல்வித்துறையை கட்டியெழுப்புவது சவால் மிக்கது என்கின்றார் சுசில்



நாட்டில் நிலவும் பொருளாதாரநெருக்கடிகளுக்குஎதிர்காலத்தில் தீர்வு காணப்பட்டாலும் , தற்போதுள்ள கல்வி முறைமையை மீண்டும் கட்டியெழுப்புவது பாரிய சவாலாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

மாலபே பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

11, 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை. தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பாடசாலை மீது கொண்டுள்ள நம்பிக்கையை மாணவர்கள் இழந்துள்ளனர். சகல மாணவர்களும் மேலதிக வகுப்புக்களுக்கே செல்கின்றனர். இதிலுள்ள பிரச்சினைகளை ஆழமாகநாம்புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஓரிரு வருடங்களுக்குள் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டாலும், கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் குறுகிய காலத்துக்குள் கட்டியெழுப்புவது பாரிய சவாலாகும். வரிப் பிரச்சினைகளுக்காக சென்று பாடசாலைகளை மூடுகின்றனர். இதனால் மாணவர்கள் இழந்த மணித்தியாலங்கள் மீண்டும் கிடைக்கப் போவதில்லை.

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் ஒரு மாதம் கடந்துள்ள போதிலும் , இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மே மாதம் மத்தியில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைகளைநடத்துவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான நிலைமையில் அது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

ஆனால், தனியார் பாடசாலைகளில் இவ்வாறு எந்தசிக்கலும்ஏற்படவில்லை. சமூகத்தில் அனைவரும் இது தொடர்பான பொறுப்பு காணப்படுகிறது. இதே முறைமையில் எத்தனை ஆண்டுகள்பயணிப்பது?கல்வி முறைமையில்மாற்றம் அத்தியாவசியமானதாகும். எனினும் அதனைச் செய்வது இலகுவானதல்ல.

இதே நிலைமை தொடருமானால் எதிர்வரும் 5 ஆண்டுகளின் பின்னர் எமது நாட்டிலுள்ளபட்டதாரிகளுக்குவெளிநாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குச்சென்றுஉயர் கல்வியைத்தொடர்வதற்கான வாய்ப்புக்கள்கிடைக்காது.உலக நாடுகளும் , இலங்கையும் கல்வி மட்டத்தில் உள்ள நிலைமைகளுக்கிடையிலான இடைவெளியை நிரப்பாவிட்டால் பொருளாதார மட்டத்தில் எந்தளவு முன்னேறினாலும் கல்வியில் முன்றே முடியாது. – என்றார்.

# மதுபானம், புகைப் பொருள் மீது அதிகரித்த வரி அறவிடத் திட்டம்



சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் படி, எதிர்வரும் ஜூன் மாதம் மதுபானம் மற்றும் புகைப்பொருள்கள் மீதான வரிகளை அதிகரிக்க இலங்கை திட்டமிட்டுள்ளது.

2025ஆம்ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக வரி வருவாயை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடு முழுவதும் சொத்து வரியை அறிமுகப்படுத்தவும், நிதி பரிமாற்றங்களை மதிப்பாய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏமாற்று அரசியலே தொடர்கின்றது

இலங்கையின் இன வேறுபாட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்து இன மக்களுக்கும் சம மதிப்பு மற்றும் வளங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அரசு புரிந்துகொண்டுள்ளது. உள்ளகப் பேச்சு, நெருக்கமான புரிந்துணர்வு மற்றும் இனக் குழுக்கள் இடையிலான பல்வகைத் தன்மையைப் புரிந்துகொள்வதன் மூலம் தேசிய ஒற்றுமையை மேம்படுத்த முடியும்.

இன ரீதியான வேறுபாடுகளுக்குத் தீர்வினைக் காண்பதற்காக ஆளும், எதிர்த் தரப்பில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றேன்.

பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய தமிழ்க் கைதிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அது தொடர்பில் காணப்படும் சட்ட விடயங்களைத் துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்தல், தேசிய காணி ஆணைக்குழுவை அரசியலமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தல், வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்குதல், அதிகாரப்பகிர்வு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்களை நாம் முன்னெடுக்கும் செயற்றிட்டத்தின் சில நடவடிக்கைகளாகச் சுட்டிக்காட்ட முடியும்.

இதனைத் தவிரவும், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தினை உருவாக்கவும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கவும் சட்டவாக்கங்களை வாகுத்து வருகின்றோம்.

– என்று இவ்வளவையும் ஹவாட் பல்கலைக் கழகத்தினருடனான நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அவர் சொல்வதைப் போன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் எந்தப் பேச்சும் நடப்பதாக இல்லை. இதற்கு முன்னரும்கூட தீர்வு தொடர்பான எந்தவொரு பேச்சும் நடக்கவில்லை. அப்படிப்பபட்ட பேச்சுக்குச் செல்வதற்கு முன்னர் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தையாவது ஆகக்குறைந்தது நிறைவேற்றுங்கள் என்றும் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு போன்ற நிறைவேற்றக்கூடிய விடயங்களை உடனே செய்யுங்கள்என்றும்தான்தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள் கேட்டனர். அது தீர்வு தொடர்பான பேச்சே அல்ல என்பது எல்லோருக்குமே தெரியும்.

கூட்டாட்சி (சமஷ்டி) கேட்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அது அரசுத் தரப்பாக இருந்தாலும் எதிர்த் தரப்பாக இருந்தாலும் சரி, ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று கூறிவிட்டு இப்போது, தீர்வு குறித்து பேச்சு நடப்பதாக வெளிநாடுகளை நம்ப வைப்பதற்கு ஒரு கதையை அவிழ்த்துவிட்டிருக்கிறார் ரணில். ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்க முடியாது என்று தமிழ் அரசுக் கட்சி உட்பட அனைத்து எதிர்த் தரப்புக் கட்சிகளும் தெரிவித்துவிட்ட நிலையில் அங்கு பேச்சு நடத்துவதற்கான முகாந்திரமே இல்லைஎன்றபோதும்தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்களை பேச்சு என்ற போர்வையில் சந்தித்துவிட்டு அதையே வெளி உலகிற்கு பேச்சு நடப்பதாகக் காட்டும் தந்திரத்தையே கொழும்பு தொடர்ந்து செய்து வருகின்றது. ரணிலும் அதையே செய்கிறார்.

அதேபோன்று உண்மைஅறியும்ஆணைக்குழுதொடர்பில் தமிழ் மக்களுடன் எந்தக் கலந்துரையாடல்களும் நடத்தப்படவேயில்லை. அவர்கள் அதனை ஏற்கிறார்களா இல்லையா என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்களின் சம்பந்தமே இன்றி உண்மை அறியும் ஆணைக்குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மற்றொரு பொய்யும் அவிழ்த்துவிடப்படுகின்றது.

இப்படியே உலகையும் ஏமாற்றி தமிழர்களையும் ஏமாற்றியே காலத்தைக் கடத்திவிடலாம் என்பதுதான் காலம் காலமாக சிங்களத் தலைமைகள் நிகழ்த்தி வரும் வஞ்சகம். அது சிறு மாறுதலும் இன்றித் தொடர்கின்றது.

# கடற் தொழில் இல்லாத மீனவர்களுக்கு டக்ளஸ் எவ்வாறு அனுமதி வழங்குவார்?

## பொய்யான செய்தி என்கின்றன மட்டு. மீனவ சங்கங்கள்



கடற் தொழில் இல்லாத மீனவர்களுக்கு அமைச்சர் டக்கிளஸ்தேவானந்தா அனுமதி பத்திரம் வழங்கியுள்ளார் என்பது பொய்யான பிர்சாரம் எனவே அந்த உண்மைக்கு புறம்பான இந்தப் பிரசாரத்துக்கு மட்டு.மாவட்ட மீனவர் சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில்மாவட்டதேசிய மீனவர்மகாசம்மேளனத்தின் தலைவர் நற்குணம் பத்மநாதன், முகைதீன் ஆள்கடல் மற்றும் வாவி கூட்டுறவு சங்க செயலாளர் வை.எல்.பள்ளித்தம்பி ஆகியோர் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மட்டு. மாவட்டத்தில் சங்கு, இறால், கடல்பிஸ், அட்டை, எல்லாம் பிடிக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கியவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுவர்தமானியில் பிரசுரிக்கப்பட்டுநாரா அமைப்பால் வழங்கப்படது.

இந்நிலையில் அன்றில் இருந்து 13 வருடமாக ஒரு சங்கத்தில் பொருளாராக இருக்கின்றேன். அட்டை பிடிக்கும் மாவட்ட சம்மேளன தலைவராக இருக்கின்றேன். இதுவரை எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை.

இருந்தபோதும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடற்தொழில் இல்லாதவர்களுக்கு மீன்பிடி அமைச்சர் அட்டை பிடிக்க அனுமதிபத்திரம் வழங்கினார் எனப் பெய்யான பிரசாரங்கள் சில ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளன.

எனவே நாங்கள் மீனவர்கள் இல்லையா? எங்களுக்குதான் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது சட்டரீதியாக வழங்கப்பட்டது. இருந்தபோதும் சிலர் இந்த விசமத்தனமான பொய் பிரசாரத்தில் ஈடுபட்டு குழப்பி வருகின்றனர். எனவே, இவ்வாறான ஆதாரமற்ற பொய் குற்றச்சபட்டை மீனவர் சங்கங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

அதேவேளை, மண்ணெண்ணெய் சரியான பிரச்சினை காத்தான்குடியில் இருந்து மட்டக்களப்பிற்கு வரவேண்டியுள்ளது. முதல்ஒரு லீற்றர்மண்ணெண்ணெய்70 ரூபாவாக இருந்த இப்போது 305 ரூபா எப்படி தொழில் செய்யமுடியும் ?அவ்வாறே மின்சாரத்தின் விலை அதிகரிப்பு முதலில் 1500 ரூபா வந்த மின்சார பட்டியல் தற்போது 3500 ரூபாவாக வருகின்றது எப்படி பணத்தை செலுத்த முடியம் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

இலங்கை மீனவர்களுக்கு சரியான கஷ்டம் இருந்தபோதும் அழுகின்றதா சாகின்றதா என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இருக்கின்ற அரசாவது தொழிலாளர்களுக்கு திட்டமிட்டு உதவிகள் செய்ய வேண்டியுள்ளதுடன்எங்களுக்கு உரிய கடல் தொழில் மற்றும் அட்டை மீன் பிடிக்கின்ற வழங்களை அரசாங்கம் பெற்றுத்தரவேண்டும்.

அதேவேளை, வடக்கில் இலங்கையின்கடல்எல்லைக்குள் இந்திய மீனவர்கள் றோலர் படகுகளில் ஊடுருவி வந்து மீனைப் பிடித்து செல்வதால் எங்களது மீனவர்களுக்கு மீன்பிடிக்க முடியாதுள்ளது. எனவே இந்திய மீனவர்களை முற்றாக எதிர்க்கின்றோம். – என்றனர்.

# 54 போத்தல் கசிப்புடன் பெண் ஒருவர் கைது!

கிளிநொச்சியில் 54 போத்தல்கசிப்புடன்பெண்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்டவிசுவமடுபுன்னைநீராவிபகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலைகாவல்கடமையில் ஈடுபட்ட பொலிஸார் வீதிச்சோதனைமேற்கொண்டனர்.

இதன்போது, பொதி செய்யப்பட்ட கசிப்பை மோட்டார்சைக்கிளில்ஏற்றியவாறு வேறொருபகுதிக்கு கொண்டு சென்றபொழுது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 54 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பை கொண்டு செல்ல பயன் படுத்தியமோட்டார் சயிக்கிள் பறிமுதல் செய்துள்ளது.

மேலும் சந்தேக நபர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. காந்தி பூங்காவில் பெண்ணின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு நகரில் உள்ள காந்திப்பூங்காவுக்கு முன்பாகவுள்ள வாவியில் பெண்ணொருவரின் சடலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மேற்படி சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பெண்ணின் மரணம் தொடர்பாகஎந்த வித தகவலும் கிடைக்கவில்லையெனவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணையை தொடர்ந்து சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் பணிகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# தாயை கொலை செய்த மகன் 8 வருடங்களுக்கு பின் கைது!

கெப்பத்திகொல்லாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தாயை கொலை செய்த மகன் 8 வருடங்களுக்குபிறகுகடந்தசனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த2015ஆம்ஆண்டு ஜுன் மாதம் 5 ஆம் திகதி 50 வயதுடைய பெண்ணொருவர் வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மேலதிக விசாரணைகளைபொலிஸார் முன்னெடுத்திருந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில்குறித்தபெண்ணின்மகன் 8 வருடங்களுக்கு பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய அவர், கட்டுநாயக்க இராணுவ முகாமில் கடமையாற்றுகிறார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அவர் இறுதி யுத்தத்தின்போது தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மகனால் துன்புறுத்தப் படுவதாக தாய் பல முறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதோடு, முன்னதாக மகன் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டமையும்தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் சந்தேக நபர்,தாயைகழுத்தைநெரித்து கொலைசெய்துள்ளார் எனத் தடயவியல் அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

நேற்று(ஞாயிற்றுக்கிழமை) சந்தேகநபர் கெப்பத்திகொல்லாவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.இந்தச் சம்பவம்தொடர்பில்கெப்பத்திகொல்லாவ பொலிஸார்மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து மாறுபட்ட அரசியலில் ஈடுபடுவோம்

## சரித ஹேரத் வியூகம்

ஜனாதிபதியின் நோக்கத்துக்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கால வரையறையின்றிபிற்போடப்பட்டுள்ளது. நிறைவேற்றுத்துறையின் நோக்கத்துக்கு அமைய தேர்தலை பிற்போட இடமளித்தால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும். சகல எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்துஅடுத்தவாரம் முதல் மாறுபட்ட அரசியல் செயற்பாடுகளில்ஈடுபடுவோம் எனநாடாளுமன்றஉறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை எந்தத் தேர்தலையும் நடத்தப் போவதில்லை என பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவை மதிக்காமல் நிறைவேற்றுத்துறைசெயற்படுகிறது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனஆணைக்குழுவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை நிறைவேற்றுத்துறை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. தேர்தலை நடத்த ஆணைக்குழு முறையாக செயற்பட்டாலும் அரசியல் அழுத்தம் தேர்தல் நடவடிக்கைகளுக்குபாரியதடையாகக் காணப்படுகிறது.

ஜனாதிபதியின் நோக்கத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடபபட்டுள்ளது. நிறைவேற்றுத்துறையில் நோக்கத்துக்கு அமைய தேர்தலை பிற்போட இடமளித்தால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும். சகல எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அடுத்த வாரம் முதல் மாறுபட்ட அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்.

எரிபொருள், எரிவாயு, மின்சாரம், இல்லாமல்இருந்த நாட்டை பொறுப்பேற்றேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையை ஆளும் தரப்பினர் கரகோஷத்துடன் வரவேற்றார்கள்.

முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஸில்ராஜபக்ஷ ஆகியோரின் நிதி முகாமைத்துவம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நாடு தீப்பற்றியெரிந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமறைமுகமாகக் குறிப்பிடுகிறார். பொதுஜன பெரமுனவினர் அதனைக் கைத்தட்டிவரவேற்றிகார்கள். பொதுஜன பெரமுனவினர்



வெட்கப்பட வேண்டும்.

பொருளாதார பாதிப்புக்கு இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

2010ஆம்ஆண்டுமுதல் 2015ஆம்ஆண்டுவரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலானஅரசாங்கம் அபிவிருத்தி பணிகளுக்கு மனம்போன போக்கில் நிதி ஒதுக்கியது.அபிவிருத்திஎன்ற பெயரில் அரச நிதி மோசடி செய்யப்பட்டது. இறுதியில் அபிவிருத்தியும் இல்லை நீதியும்இல்லைபொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் குறுகிய காலத்திற்குள் 10 பில்லியன் டொலர் சர்வதேச பிணைமுறிகள் கடனை பெற்றுக்கொண்டது.இலங்கை அரசமுறை கடன் பொறிக்குள் சிக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதானபங்காளியாக உள்ளார். இதனை ஆளும் தரப்பினர் அறியாமல்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவால்மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என புகழ் பாடிக் கொள்கிறார்கள். - என்றார்.

# இரு கைகளையும் வெட்டி கடலில் வீசிய கொடூர நபர் உட்பட இரண்டு பேர் கைது

மொரட்டுவை, மோசஸ் வீதி, எகொடஉயன கடற்பரப்பில் உள்ள பாறைகளுக்கிடையில் ஞாயிற்றுக்கிழமை வாளொன்று கண்டுபிடிக்கப்பட்டதோடு, இது தொடர்பில் குற்றம் இழைத்ததாகக் கூறப்படும் நபரும் மேலும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாள் நபரொருவரின் கையை வெட்டி துண்டாடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது எனபொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தசம்பவம்தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர், குறித்த வாளினால் ஒருவரின் இரண்டு கைகளையும் வெட்டி துண்டாடி, அந்தக் கைகளைஅக்கடலில்வீசினார் என விசாரணையின்போது பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், சந்தேகநபருக்கு அடைக்கலம் அளித்த 33 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்கிசை பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# விமான நிலையத்தில் வெடிகுண்டு புரளி கிளப்பிய 14 வயது மாணவன்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெடிகுண்டு காணப்படுவதாக போலி அழைப்பு விடுத்த 14 வயதுடைய பாடசாலை மாணவரொருவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்எனவிமான நிலையப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவர் சனிக்கிழமை மாலை அவசர அழைப்புப்பிரிவுக்குதொலைப்பேசி அழைப்பை மேற்கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த அழைப்பின் பிரகாரம், அதிகாரிகள்விமான நிலைய முனையத்தை சோதனையிட்டுக் கொண்டிருந்த சில நிமிடங்களின் பின்னர் அந்த மாணவர் மீண்டும் தொலைபேசி அழைப்பை எடுத்து, தான் கேலியாக கூறியதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, களுபோவிலவில் வசிக்கும் மாணவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதில், இந்தச் செயலின் பாரதூரம் தெரியாததால் அவர் இவ்வாறு செய்துள்ளார் எனத் தெரியவந்தது. இதனையடுத்து அந்த மாணவரை கடுமையாக எச்சரித்து விடுவித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கச்சா எண்ணெய் விலை சரிந்தது



உலக சந்தையில் கச்சா எண்ணெய்விலைதொடர்ந்து குறைந்து வருகிறது.

அதன்படிநேற்றுபிரண்ட் கச்சா எண்ணெய் பேரல் ஒன் றின் விலை 74.99 டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

மற்றும் டபிள்யூ.டி.ஐ. எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 69.26 டொலர்களாகக் காணப்பட்டது.






# 2022இல் எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 3.1 சதவீதம் அதிகரிப்பு

## யுனிசெப் அமைப்பின் கடந்த ஆண்டு அறிக்கையில் தகவல்

இலங்கையில் கடந்த 2021 ஆம் ஆண்டில் 12.2 சதவீதமாக காணப்பட்ட எடைகுறைந்தசிறுவர்களின் எண்ணிக்கை, கடந்த 2022 ஆம்ஆண்டு15.3 சதவீதமாக அதிகரித்திருப்பதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேபோன்று தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள்சிரமங்களுக்குமுகங்கொடுத்திருந்ததுடன், பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள்'சிறுவர் தொழிலாளர்' எண்ணிக்கை அதிகரிப்புக்கு வழிவகுப்பதுடன், சிறுவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது என்றும் இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டுக்கான தெற்காசிய நாடுகளின் பொருளாதார மற்றும்மனிதாபிமானநிலைவரம் தொடர்பான அறிக்கையிலேயே யுனிசெப்அமைப்பு மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் நிலைவரம் தொடர்பாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கையில் கடந்த 2022 ஜூலை மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 664,704 கொவிட்19 வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியிருந்ததுடன், 16,535 கொவிட் மரணங்களும் இடம்பெற்றிருந்தன.

அதேபோன்று 14.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் முதலாம், இரண்டாம் கட்டத் தடுப்பூசியை பெற்றுக் கொண்டதுடன், 8 மில்லியன் மக்கள் மூன்றாம் கட்டத் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து இலங்கையில்கடந்தஆண்டு பொருளாதார நெருக்கடி பூதாகரமானபிரச்சினையாக மாறத் தொடங்கியது.

அத்துடன், அது நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக, 2021 ஆம் ஆண்டில் 12.2 சதவீதமாகக் காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 15.3 சதவீதமாக அதிகரித்தது. தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்ததுடன், பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையேற்பட்டது. அதுமாத்திரமன்றி, கடதாசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக பரீட் சைகள் கல்வி அமைச்சால்பிற்போடப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் சிறுவர்கள் 'சிறுவர் தொழிலாளராக' மாறுவதற்கு வழிகோலியதுடன், அவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத் தியது.

இவ்வாறானதொரு பின்னணியில்பொருளாதார நெருக்கடியின் விளைவாக பாதிக்கப்பட்டுள்ளமக்களுக்கு கைகொடுக்கும் நோக்கில் சுகாதாரம், போசணை, சிறுவர் பாதுகாப்பு, கல்வி, சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகள் சார்ந்து உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்கென எம்மால் பல்வேறு செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

கடந்த 2022 ஆம் ஆண்டு750,000சிறுவர்கள் உள்ளடங்கலாக 1.3 மில்லியன் மக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகள் யுனிசெப் அமைப்பால் வழங்கப்பட்டன.

யுனிசெப் அமைப்பின் தலையீட்டின் ஊடாக நகர்ப்புறங்களில் வசிக்கும் சுமார் 8 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தூய குடிநீர் வசதியை பெற்றிருப்பதுடன், பின்தங்கிய மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளில் வசிக்கும் 285,403 சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.




இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை 26.03.2023 கதிர் 09

## தேர்தல் ஒத்திவைக்கப்படுவது இது முதல் தடவையல்லவே!

### 5ஆவது தடவை என்கிறது பெரமுன

இலங்கை வரலாற்றில் ஐந்தாவது தடவையாகத் தேர்தல் காலதமாதமாகு-வதாகத்தெரிவித்தபொதுஜன பெரமுனவின்நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேதமதுகட்சியின் நிலைப்பாடு விரைவில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதே என்று குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தல்தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும்

## அரசியல் கட்சிகளுக்கு காலக்கெடு

அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகள்தமதுகட்சிகளின் உத்தியோகபூர்வ ஆண்டுக் கணக்கறிக்கையை தேர்தல் திணைக்களத்திற்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தேர்தல்கள் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் தமது ஆண்டுக்கணக்கறிக்கையை தேர்தல்கள்திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது தேர்தல்கள்சட்டத்தின்பிரகாரம் கட்டாயமாகின்றது. அதற்காக கடந்த 16ஆம்திகதி வரையில் காலக்கெடு வழங்கப்பட்டது.

இருப்பினும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்புக்கு அமைவாக அக்கட்சிகளுக்கு மேலும் 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கால அவகாசமானது எதிர்வரும் 31ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றது. அதற்குள்அனைத்துஅரசியல் கட்சிகளும் தமது ஆண்டுக் கணக்கறிக்கையை அனுப்பி வைக்க வேண்டும். அந்தக் கணக்கறிக்கைகள்உத்தியோகபூர்வமான கணக்காய்வாளரா உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆரசியல் கட்சிகள் இந்தச் செயற்பட்டிலிருந்து விலகியிருந்தால் சட்டங்களுக்கு அமைவாக அந்த அரசியல் கட்சிகளுக்கான அங்கீகாரத்தினை ஆணைக்குழு இரத்துச்செய்யும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆற்றில் குதித்து மாயமான கைதி உயிரிழப்பு

கண்டி, பல்லேகல சிறைச்சாலை முகாமில் இருந்து தப்பிச்சென்ற கைதியொருவர் மகாவலி ஆற்றில் குதித்து காணாமற்போயிருந்த நிலையில் அவரது சடலத்தை மீட்டுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கொழும்பைச்சேர்ந்த 34 வயதானவர். வெள்ளிக்கிழமை காலை சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்வதற்காக

# வெடுக்குநாறி மலையில் இருந்த இந்து மத அடையாளங்கள் அனைத்தும் துடைத்தழிப்பு

### நேரில் பார்த்த பக்தர்கள் அதிர்ச்சி; பெரும் சோகம்









(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.26

வவுனியா வடக்கு, நெடுங்கேணிவெடுக்குநாரிமலையில் இருந்தசிவன்ஆலயலிங்கம் உட்பட அனைத்து இந்து மத விக்கிரகங்களும் அடையாளங்களும்அகற்றப்பட்டுள்ளன. அங்கு இன்று நேரில் சென்றுபார்த்த ஆலயநிர்வாகிகள் காலைக்கதிர் பத்திரிகையிடம் இதனை உறுதி செய்தனர்.

வெடுக்குநாரி மலையில் ஆதிசிவன் ஆலயம் ஒன்றிருந்தது. நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் இந்த ஆதி சிவன் ஆலயத்தில் வழிபாடு நடத்தி வந்தனர். அங்கு சிவலிங்கம், அம்மன், பிள்ளையார், பாலமுருகன் மற்றும. வயிரவர் விக்கிரகங்களும் தனித் தனியாக வைக்கப்பட்டிருந்தன.



## தப்பியோடிய சிறைக் கைதி துரத்திப்பிடிப்பு

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் அதிகாரிகளிடமிருந்து தப்பியோட முயற்சித்த சமயம் விரட்டிப் பிடிக்கப்பட்டார். இது தொடர்பான காணொலி சனிக்கிழமை சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பைக் கிளப்பியது.

வவுனியா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காக இந்தக் கைதியை சிறையிலிருந்து அதிகாரிகள் வெளியே அழைத்து வந்த சமயம் அவர் அவர்களின் பிடியிலிருந்து தப்பித்து வயல்வெளிகளுக்குள் ஓடினார்.

அவரைத் துரத்திச்சென்ற சிறை அதிகாரிகள் விரட்டிப் பிடித்துகையோடு இழுத்தவந்த காட்சிகள் அந்தக் காணொலியில் பதிவாகியுள்ளன.

சம்பவத்தை நேரில் கண்டநபர் ஒருவர் அலைபேசியில் (மொபைல்) அதனைப் பதிவு செய்து சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்துள்ளார்.

## ஆணைக்குழு தயார்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் பேச்சு நடத்த ஆணைக்குழுவினர் தயாராகவே இருக்கின்றனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

"தேர்தல்கள் தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன எம்மை அழைத்து பேசவுள்ளார் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவரது அழைப்பினை ஏற்று பேசுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆணைக்குழு தயாராகவே உள்ளது. நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் அவருக்குத் தெளிவுபடுத்துவோம்" என்றார் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

## பொய் சொல்லி அதிகாரத்தில் தொங்காமல் பதவியைத் துறந்து வீடு செல்லவேண்டும்

### ஆட்சியாளர்களுக்கு சரத்பொன்சேகா அறிவுரை

பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் பொய்களைச் சொல்லி அதிகாரத்தைத்தக்கவைக்காது ஆட்சியாளர்கள் உடனடியாகப் பதவியைத் துறந்து வீட்டுக்குச் செல்லவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்

கொழும்பில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சியாளர்கள் பதவியேற்கும்போது 700 கோடி டொலர் இருப்பு காணப்பட்டது. அதனை வைத்து அரச நிர்வாகத்தை அவர்களுக்கு முறையாக நடத்த தெரியவில்லை. தற்போது



## ரூபாய் பெறுமதி நிலையானதும்தான் பேருந்துக் கட்டணங்கள் குறையுமாம்

ரூபாயின் பெறுமானம் நிலைபெற்றதும் சூத்திரத்திற்கு அமைவாக பேருந்துக் கட்டணங்களை குறைப்பதற்கு முடியும் என்று போக்கு-வரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

களுத்துறையில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத் தின் நீடிக்கப்பட்ட கடன் தொகைகிடைத்தமையால்மிகவும் கடினமான காலமொன்றை மெல்லக் கடந்துள்ளோம். அதற்காக அனைத்தும் சரியாகிவிட்டது என்று கூற முடியது.

தற்போது உள்நாட்டு அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அத்துடன், உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்து, சந்தைப்படுத்தல்களுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் பண்டிகைக் காலங்களில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளைச்சந்தைப்படுத்துவதற்கு உரிய வசதிகள்

## தமக்கு நெருங்கியவர்களை பதவியில் அமர்த்துவதே ஆட்சியாளரின் நோக்கம்

### அதற்காகவே சிறப்புக்குழுக்கள் நியமனம் என்கிறார் கொழும்பு முதல்வர் வேட்பாளர்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளின் செயற் பாடுகள் தொடர்பில் இந்த ஆட்சி குழுக்களை அமைத்துள்ளதன் நோக்கம் தமக்கு நெருங்கியவர்களை பதவிகளில் அமர்த்துவதே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை முதன்மை வேட்பாளர் முஜிபுர்ரஹ்மான்குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

## ரணிலுக்கு ஒரு வருட காலம் அவகாசம் தரப்படவேண்டும்

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் சந்திரசேன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு ஒருவருட கால அவகாசம் வழங்கி அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென பொதுஜன பெரமுனவின் உறுப்பின ரும் அமைச்சருமான எஸ்.எம்.சந்திரசேன பகிரங்கக் கோரிக்கை விடுத்தார்.

அநுராதபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இந்தக் கோரிக்கையை வெளிப்படுத்தினார். அத்துடன் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க இக்கட்டான நிலையில் ஜனாதிபதிப் பதவியை ஏற்று நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நாட்டின் நிலைமைகளைத் தற்போது சுமூகமாக்கி



## இந்துமத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மலைப் பகுதியில் தொல்லியல் அடையாளங்கள் காணப்படுவதாகத் தெரிவித்து அதனை தொல்லியல் திணைக்களத் திற்குரிய பகுதியாக 2019ஆம் ஆண்டு அடையாளப்படுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் அந்த மலைக்கு ஆதிசிவன் ஆலயத்தை வழிபட திணைக்களம் தொடர்ந்து இடைஞ்சல்களையும் தடைகளையும் ஏற்படுத்தி வந்தது. அங்கு ஏற்படுத்தப்பட்ட தற்காலிக கட்டுமானங்கள் கூட அமைக்கப்படக்கூடாது என்றும் தடை விதித்தது.

இது தொடரபில் ஆலய நிர்வாகத்தினர் மீது தொல்லியல் திணைக்களத்தினர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா நீதிமன்றில் ஆலய நிர்வாகம் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு இப்போதும் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் இருந்த இந்து மத விக்கிரகங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன என்கிற தகவலின் அடிப்படையில் ஆலய நிர்வாகத்தினர் இன்று அங்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

"ஆலயத்தின் விக்கிரங்கள் அனைத்தும் அரச திணைக்களம் ஒன்றைச் சேர்ந்தவர்களால் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்படுகின்றன என்று தகவல் கிடைத்தது. வந்து பார்த்தோம். எமது விக்கிரகங்கள் எவையும் இங்கு இல்லை. அவை இருந்த இடம் தெரியாத அளவிற்கு அனைத்தும் துடைத்தழிக்கப்பட்டுள்ளன" என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

"கடந்த பல வருடங்களாக ஆலய நிர்வாகத்தினர் ஊட்பட எவரையும் இந்த இடத்திற்கு வர தொல்லியல் திணைக்களம் அனுமதித்ததில்லை. அப்படியிருக்கும் போது இங்கிருந்த விக்கிரகங்கள் எப்படி அந்தத் திணைக்களத்தின் அனுமதியும் அனுசரணையும் இன்றி எடுத்துச் செல்லப்பட்டன?" என்றும் ஆலய நிர்வாகத்தினர் கேள்வி எழுப்பினர். அரச திணைக்களத்தின் ஊடாக இங்கு தமிழர்களின் மத வழிபாட்டிடத்தையே இல் லாது ஒழிப்பது அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் என்று இந்து மத ஆர்வலர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

## ரணிலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றார். அவரது முயற்சியால் நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. அவர் அடுத்த கட்டமாக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளார். கடன் வழங்குநர்களுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளார்.

அவ்விதமான செயற்பாடுகள் இடம் பெறுகையில் தேர்தலை நடத்துவதானால் நிலமைகள் குழப்பமடையும். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு வருட கால அவகாசத்தினை வழங்க வேண்டும். அவர் நாட்டின் நிலமைகளை மேம்படுத்திய பின்னர் எந்தவொரு தேர்தலுக்கும் செல்ல முடி யும்.

அப்போது அந்ததந்தத் தரப்பினர் முன்வைக்கும் கோட்பாடுகளுக்கு அமைவாக மக்கள் ஆணை வழங்குவார்கள். யாருடைய கொள்கை நாட்டுக்குச் சரியானது என்பதை மக்களே தீர்மானிப்பார்கள். தற்போது தேர்தலுக்கு அவசரப்படுவதானது அனைத்து நிலைமைகளையும் குழப்பி மேலும் மோசமான நிலைமையை ஏற்படுத்துவதற்கே வித்திடும் – என்றார்.

## ரூபாய் பெறுமதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படவுள்ளன. குறிப்பாக ஏப்ரல் 1 முதல் 12 வரையில் அவ்வாறு முதன்மை வீதிகளில் இருமருங்கிலும் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தையை நடத்த முடியும். அங்கு தற்காலிகமாகவே சந்தை நடத்த முடியும். கட்டுமானங்களைச் செய்யமுடியாது. அதற்கான அனுமதியை பிரதேச செயலாளர்கள் வழங்குவார்கள். அவர்களின் உதவியுடன் சந்தைகளைத் திட்டமிட்டு நடத்த முடியும்.

அதேநேரம், உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. அத்துடன் பெற்றோலிய அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளோம். அதனை அடுத்து பெற்றோலிய பொருட்களுக்கான விலைகளை குறைக்க முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளோம்.

தற்போது டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமானம் அதிகரித்து வருகின்றது. இது நிலையான ஓரிடத்தை அடையவேண்டும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டவுடன் நாம் சூத்திரத்திற்கு அமைவாக பேருந்துக் கட்டணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் – என்றார்.

## பொய் சொல்லி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறுமனே 33 கோடி தான் கிடைத்துள்ளது.

ஆகவே நாணய நிதியம் வழங்கியுள்ள இந்தத் தொகையை வைத்துக்கொண்டு எப்படி நாட்டை நிர்வாகம் செய்ய முடியும்? மேலதிகமாக நிதி கிடைக்கும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டாலும் கடன் மறுசீரமைப்பு நிறைவடையும் வரையில் அந்த நிதியும் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

ஆகவே தொடர்ந்தும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றவேண்டாம். அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இவ் விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன – என்றார்.

# வங்கி வைப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய மொத்த நிதி தேவையை 13 சதவீதத்திற்கு நிலைப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் தேசிய கடன் அறவீட்டை குறைந்த மட்டத்தில் இரத்து செய்ய நேரிடும்.

இதனால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் வங்கி வைப்பாளர்கள் ஏதாவதொரு வழியில் பாதிக்கப்படுவார்கள், ஆகவே நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதையிட்டு பட்டாசு வெடித்து, கொண்டாடுவது அவசியமற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவி–யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

1998 ஆம் ஆண்டு இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடு என்ற நிலையில் இருந்து நடுத்தர வருமானம் பெறும் நாடாக உயர்வடைந்தது. இதனால் ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கு சர்வதேசத்தால் கிடைக்கப்பெறும் உதவிகள், ஒத்துழைப்புகள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவில்லை.

இதனால் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தர, வரவு – செலவு பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்ய முதன் முறையாக திறைசேரி உண்டியல், திறைசேரி பிணைமுறிகள் ஆகியவற்றை அறிமுகம் செய்தார். இதன் பின்னர் பல்வேறு நாடுகளிடமிருந்து நிதி மற்றும் ஏனைய ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெற்றன.

வெளிநாட்டு அரசமுறை கடன்களால் ஏற்படும் பாரிய பொருளாதார நெருக்கடியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்கு விளங்கிக் கொண்டு 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலை 2015 ஆம் ஆண்டு நடத்தினார். 2016 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் இலங்கையின் அரசமுறை கடன் நிலைபேறான தன்மையை இழந்துள்ளது என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டு இலங்கை வங்குரோத்து நிலை அடையும் எனக் குறிப்பிடப்பட்டது.

வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் அப்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டது, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடாமல் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யமுடியும் என்று குறிப்பிட்டது.

இலங்கையின் கடன் நிலை ஸ்தீரமற்ற நிலையில் உள்ளது. கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படும். இதனால் இலங்கை வங்குரோத்து நிலை நோக்கிச் செல்லும் என சர்வதேச நாணய நிதியம் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை மத்திய வங்கிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியதாக புலனாய்வுத் தகவல் கிடைக்கப் பெற்றும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவி;ல்லை. ஆகவே, குண்டுத்தாக்குதலுக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு தரப்பினர் மற்றும் அமைச்சரவை பொறுப்புக்கூற வேண்டும் என ஆளும்தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அவ்வாறாயின் பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் சர்வதேசம் வழங்கிய அறிவுறுத்தல்களை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை. ஆகவே, பொருளாதாரப் பாதிப்புக்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

10 பிரதான நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்ற முடியாது. 2025 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் மொத்த தேசிய உற்பத்திகளை 2.3 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் குறுகிய காலத்துக்குள் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இதற்கமைய 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் மொத்த தேசிய வருமானத்தை 15.3 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்ள வேண்டும். 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் லிபரல் கொள்கையைப் பின்பற்றியவர்களால் 12 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய வருமானம் 8 சதவீதமாக வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டது.

2026 ஆம் ஆண்டு அரச செலவுகள் 19.4 வீதத்தால் குறைக்கப்பட வேண்டும்.

மொத்த தேசிய உற்பத்திகளைக் குறுகிய காலத்துக்குள் அதிகரித்துக் கொள்வது இலகுவானதொரு காரியமல்ல, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய சராசரி நிதி அவசியத்தை 13 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டுமாயின் தேசிய கடன் அறவீட்டை குறைந்த மட்டத்தில் நீக்க வேண்டும்.

ஆகவே, ஊழியர் சேமலாப நிதியம், வங்கி வைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகவே சர்வதேச நாணய நிதியததின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து பட்டாசு வெடித்து கொண்டாடி பெருமை கொள்வது அவசியமற்றது. இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார பாதிப்பில் இருந்து மூச்சு விடும் நிலையைக் காண்பித்துள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகள், நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் ஆகிய காரணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கடுமையான தீர்மானங்களை மேற்கொள்வோம் எனக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் கிறீஸ், ஆஜன்டீனா, லெபனான் ஆகிய நாடுகளின் நிலையே இலங்கைக்கு ஏற்படும். – என்றார்.

## ஆணைக்குழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் பிரதான சிக்கல் நிதியின்மையாகும்.

உயர் நீதிமன்ற உத்தரவின் பின்னரும் நிதி அமைச்சினால் தேர்தலுக்கான நிதி விடுவிக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் எவ்வாறு எம்மால் எப்படித் தேர்தலை நடத்த முடியும்? அரசிடம் நிதி இல்லை என்றால் வெளித் தரப்பினரிடமிருந்து நிதியைப் பெற்றுத் தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு ஏற்பாடும் அரசமைப்பில் இல்லை.

வெளிதரப்பினரிடமிருந்து நிதியை பெற்றுக்கொள்வதற்கான சட்ட மூலமொன்றோ அல்லது அமைச்சரவை யோசனையொன்றோ முன்வைக்கப்பட்டால் அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஆனால், நாட்டில் அவ் வாறான ஏற்பாடுகள் இல்லை – என்றார்.

## தேர்தல் ஒத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த தாவது: சர்வதேச நாடுகளில் பலவற்றிலும் அந்தந்த நாடுக ளில் காணப்பட்ட தவிர்க்க முடியாத நிலைமைகளை அடுத்து தேர்தல்கள் காலதாமதமாகியுள்ளன.

அதுபோன்று தான் இலங்கையிலும் தற்போது தேர்தல் காலதாமதமாகியுள்ளது.

இலங்கையில் தேர்தல் காலதமாதமாகுவது இதுதான் முதன்முறை அல்ல. கடந்த கால வரலாற்றில் ஐந்து தடவைகள் காலதமதமாகியுள்ளன. தற்போதைய சூழலில் பொதுமக்கள் பொருட்களின் விலைகளை குறைத்து வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துமாறே கோருகின்றனர். அவர்கள் தேர்தலை விரும்பவில்லை.

பொது ஜன பெரமுனவைப் பொறுத்த வரையில் தேர்தலை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் உள்ளது.

இருப்பினும் பொது மக் களின் எதிர்ப்பார்ப்புக்களை கவனத்தில் கொள்ளவேண்டிய தேவை யும் அரசியல் கட்சியென்ற அடிப்படையில் எமக்குள்ளது என்றார்.

## தமக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர், உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான செயற்பாடு கள் தொடர்பில் இரண்டு குழுக்களை நியமித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் ஒரு குழுவும் வஜிர அபய வர்த் தன தலைமையில் மற் றொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன. தேர்தல்களை நடத்தவதற்கு பதிலாக குழுக்களை நியமித்து விடயங்களை கையாளவே அரசுத் தலைவர் முனைகிறார்.

குறிப்பாக, ஆட்சியாளர்கள் தமக்கு நெருக்கமானவர்களைப் பதவிகளில் அமர்த்தி நிர்வாகத்தினை முன்னெடுப்பதற்கே திட்டமிட்டு இந்தக் குழுக்களை நியமித்தது.

இது நிறைவேற்று அதிகாரத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிலைமையாகும். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை அரசு தொடர்ந்து முன்னெடுப்பது நாட்டின் ஜனநாயகத்தைக் கேலிக்குட்படுத்துவதாகும் – என்றார்.

# சர்வதேச நாணய நிதிய உதவிச் செயற்றிட்டம் இலங்கைக்கு நிரந்தர 'பிணையெடுப்பு' அல்ல

## உள்நாட்டு, வெளிநாட்டு பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டு

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்றிட்டம் ஒரு 'பிணையெடுப்பு' (பெயில்–அவுட்) அல்ல. இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக இலங்கை பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படுமே தவிர, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வு வழங்கப்படமாட்டாது.

எனவே, நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடைவதை தடுப்பதற்கும் பொருளாதார மீட்சியிலிருந்து பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்கும் இந்த உதவிச் செயற்றிட்டத்தின் நிபந்தனைகளுக்கு அப்பால் அவசியமான பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளியல் நிபுணர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான 3 பில்லியன் டொலர் உதவிச்செயற்றிட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதியளித்ததைத் தொடர்ந்து உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளியல் அமைப்புக்களும், பொருளாதார நிபுணர்களும் இதுபற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கான 17 ஆவது உதவிச் செயற்றிட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை வழங்கியுள்ள அனுமதி வெறும் ஆரம்பம் மாத்திரமேயாகும். கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் அல்லது மந்தகதியிலான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாகக் கையிருப்பு பற்றாக்குறை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாடுகளுக்கு உதவுவதே நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்றிட்டம் ஒரு 'பிணையெடுப்பு' (பெயில்–அவுட்) அல்ல. மாறாக இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக இலங்கை பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படும். இது இலங்கை இருதரப்பு, பல்தரப்பு மற்றும் நிதியியல் சந்தைகளை நாடுவதற்கு உதவும்.

எது எவ்வாறிருப்பினும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்றிட்டம், இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வை வழங்காது.

ஆகவே, தற்போது சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையின் அனுமதியைத் தொடர்ந்து முதலாவது கட்டமாக இலங்கைக்கு 333 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும். அதனையடுத்து கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான மதிப்பீடு மற்றும் சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்றிட்ட நிபந்தனைகள் என்பன பகிரங்கப்படுத்தப்படும். எஞ்சிய நிதி சுமார் 4 வருடகாலத்தில் வழங்கப்படும்.

இருப்பினும், அது நாணய நிதியத்தின் நிபந்தனைகள் உரியவாறு நிறைவேற்றப்படுவதிலேயே தங்கியிருக்கிறது. இருப்பினும், இலங்கை மீண்டும் வங்குரோத்து நிலையை அடைவதைத் தடுப்பதற்கும் பொருளாதார மீட்சியிலிருந்து பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்கும் இவ்வுதவிச் செயற்றிட்டத்தின் நிபந்தனைகளுக்கு அப்பால் அவசியமான பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது இன்றியமையாததாகும் என்று 'அட்வகாட்டா இன்ஸ்டியூட்' அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வழமையாக சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டங்கள் பிரச்சினையின் அறிகுறிகளை தணிப்பதற்கு ஏற்ற வகையிலேயே வடிவமைக்கப்படும். மாறாக, அது அந்தப் பிரச்சினைக்கான அடிப்படை காரணத்துக்கு தீர்வை வழங்காது. அதேபோன்று இலங்கையை பொறுத்த மட்டில், இங்கு அடிப்படை பிரச்சினை நிர்வாகத்திலும், ஊழல் மோசடிகளிலுமே இருக்கின்றது என்பது தற்போது சர்வதேச நாணய நிதியத்துக்கும் ஏனைய அனைத்துத் தரப்பினருக்கும் தெளிவாகப் புரிந்திருக்கிறது.

இருப்பினும், சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய செயற்றிட்டம் இப்பிரச்சினையைக் கையாள்வதற்கு தவறியிருக்கிறது என்று 'வெரிட்டே ரிசேர்ச்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிரன் டி மெல் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான உதவிச் செயற்றிட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்திருப்பதுடன், முதற்கட்டமாக சுமார் 330 மில்லியன் டொலர்களை உடனடியாக வழங்கியுள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு நாணய மாற்றுக்கையிருப்பில் 15 சதவீத அதிகரிப்பு ஏற்படுவதுடன் அது அத்தியாவசிய பொருள்களின் உயர்வான இறக்குமதிக்கும், அதனைத் தொடர்ந்து மீட்சிக்கும் பங்களிப்பு செய்யும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் பொருளியலாளர் ஸோர்கி லேனோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்துவரும் 4 வருட காலத்தில் 3 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கான உதவிச்செயற்றிட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்திருக்கிறது.

கடந்த 1965 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை 16 முறை சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கிறது. அவை அனைத்தும் தோல்வியடைந்திருக்கின்றன.

இலங்கைக்கு மீண்டுமொரு கடன் தேவையில்லை. மாறாக, கடந்த 1884 – 1950 வரையான காலப்பகுதியில் நடைமுறையில் இருந்ததைப் போன்ற 'நாணயச்சபை' முறைமையே இலங்கையின் தற்போதைய தேவை என்று அமெரிக்காவை சேர்ந்த பிரபல பொருளியலாளர் ஸ்டீவ் ஹன்க் தெரிவித்துள்ளார்.

# திரிசாரணர் சின்னம் சூட்டல்

யாழ் இந்து திரிசாரணர் குழுவின் 6 சாரணர்களுக்கான திரிசாரணர் சத்தியப்பிரமாண நிகழ்வுடன் கூடிய சின்னம் தரித்தல் நிகழ்வு இன்று கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது.

திரிசாரணர் குழுவானது பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சாரணர் சேவையினை 26 வயது வரை தொடர்வதற்கான கட்டமைப்பாகும்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்தீஸ்வரன், கோகுல ரமணன், சிவசங்கர், நிமல், டினுசாந்தன், கோபிராம் ஆகிய சாரணர்கள் திரிசாரணர்களாக உறுதியேற்பு எடுத்துக்கொண்டனர்.

யாழ். மாவட்ட முன்னைநாள் சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன், யாழ் மாவட்ட சாரண உதவி மாவட்ட ஆணையாளர்களான கோ.சத்தியன், துற்ஜெயந்தன், சாரணர் தலைமை செயலக உதவி ஆணையாளர் அமல்ராஜ், யாழ் இந்துக் கல்லூரி சாரண ஆசிரியர் நிதர்சன், யாழ் இந்து திரிசாரண ஆசிரியர் சுஜீவன் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

யாழ் இந்து திரிசாரணர் குழுவானது 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய சாரணர்களுக்கான திரிசாரணர் குழுவாக தொடங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# தேர்தல் பிற்போடப்பட்டமைக்கும் எதிர்க்கட்சிக்கும் தொடர்பில்லை

## நாலக கொடஹேவா ஆணித்தரக் கருத்து



உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போடும் தீர்மானத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

தேர்தலை விரைவாக நடத்துமாறு சகல எதிர்க்கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வலியுறுத்திய போது தேர்தலுக்கு முரணான கருத்துக்களை மாத்திரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னணி முன்வைத்தது என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சகல அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டப்பட்டது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த தீர்மானத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவை மதிக்காமல் அரசாங்கம் குறிப்பாக நிதியமைச்சு செயற்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்கு ஏற்பட்டுள்ள தடைகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆணைக்குழுவின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய் யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினோம்.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என ஆணைக்குழு குறிப்பிட்டது.

ஆணைக்குழுவின்சுயாதீனத் தன்மையை நிதியமைச்சு சுற்றறிக்கையால் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற பேச்சின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவாக நடத்துமாறு சகல எதிர்க் கட்சிகளும் வலியுறுத்திய போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரம் தேர்தலுக்கு எதிரான கருத்துக்களை முன்வவைத்தது.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களையும், தேர்தலுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் இடைக்காலத் தடையுத் தரவு பிறப்பித்த உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைக்க ஆளும் தரப்பினர் தீர்மானித்துள்ளனர். – என்றார்.

# பிரபா கணேசனின் தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி உதயம்



மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் வென்றெடுத்து தமது அரசியல் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்துச் செல்வதை நோக்காகக் கொண்டு முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி உதயமாகியுள்ளது.

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தபால் பெட்டி சின்னத்தில் 9 சிவில் அமைப்புகள் இணைந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியை உருவாக்கியுள்ளதுடன், இலங்கை அரசியல் வரலாற்றில் சிவில் அமைப்புக்களுடன் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியொன்று கைகோர்த்துள்ளமை இதுவே முதல் முறையாகும்.

இந்தக் கூட்டணியில் சிவில் செயற்பாட்டாளரும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான அசேல சம்பத், தமிழ்த் தேசிய பணிக்குழு தலைவர் நல்லையா குமரகுருபரன், கொழும்பு மாவட்ட மகா சபைத் தலைவர் எஸ். ராஜேந்திரன், அகில இலங்கை சிறுகைத்தொழில் சங்கத்தின் ஸ்தாபகர் நிலூ குமார, தாழ்நிலை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ருவன் கால்லகே, தேசிய நுகர்வோர் சங்கத்தின் தலைவர் என்.பீ.கே. வணிகசிங்க, முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.எச். இஸ்மாயில், தோட்டத் தொழிலாளர் உரிமை மையத்தின் தலைவர் எஸ். ஜே.சீ. விஜேதுங்க, இலங்கை சமத்துவ கூட்டணியின் பொதுச்செயலாளர் குவால்டின் ஆகியோர் தேசிய ஜனநாயககூட்டணியில் இணைந்துகொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

9 சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று(சனிக்கிழமை) காலை கொழும்பு 7 இல் அமைந்துள்ள பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் வென்றெடுத்து, தமக்கே உரிய தனித்துவமான பாதையில் பயணிப்பதே எமது பிரதான நோக்கமாகும் என ஜனநாயக தேசிய கூட்டணித் தலைவர் பிரபா கணேசன் தனது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

'இந்த கூட்டணி ஒரு வித்தியாசமான கூட்டணியாகும். இந்த சிவில் அமைப்புக்கள் மக்களோடு மக்களாக நின்று செயற்படுகின்றன. மக்களின் தேவைகள் மற்றும் அபிலாகைளை சரியான வகையில் புரிந்துகொண்டு எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய காரணத்தால்தான் இந்த வகையான கூட்டணியை நாம் அமைத்தோம்.

எமது கூட்டணி, ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து சேர்ந்த கூட்டணியாக அல்லாமல், சிவில் அமைப்புகளுடன் ஒன்றிணைந்த கூட்டணியாகும். இந்தக் கூட்டணியுடன் இரண்டு அரசியல் கட்சிகள் இணைவதற்கு தங்களது ஆர்வத்தைத் தெரிவித்திருந்தபோதிலும், அவற்றை நான் தள்ளி வைத்துவிட்டே இந்த கூட்டணியை ஆரம்பித்தேன்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கும், ஒரு ஸ்திர மான அரசாங்கமொன்றை உருவாக்குவதற்குமே நாம் ஒன்றிணைந்தோம்.

இந்தக்கூட்டணியைகூட்டுத்தலைமை இருக்கக்கூடிய விதத்தில் அமைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். தமிழ்த் தலைமை, முஸ்லிம் தலைமை, சிங்களத் தலைமை என மூன்று இணை தலைமைகளை உருவாக்கியே கூட்டணி முன்னோக்கி செயற் பட வேண்டும் என எண்ணினேன். எனினும், அவர்கள் தங்களி டையே கலந்து பேசி, அவ்வாறு செய் வதை விரும்பாமல் தமிழ்த் தலைமை யின் கீழ் செயற்படத் தயார் எனக் கூறி தங்களின் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர்.

இந்தக் கூட்டணி, எதிர்காலத்தில் ஏனைய மாவட்டங்களுக்கும் பலமிக்க கூட்டணியாக விஸ்தரிக்கப்பட்டு, எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அசேல சம்பத், நிலூ போன்றவர்கள் ஒவ்வொரு நாளும் அலுவலகத்துக்கு வருகை தந்து அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான உற்சாகத்தை எங்களுக்குத் தந்த வண்ணம் உள்ளனர்.

ஆகவே, அதன் அடிப்படையில், விலைவாசி அதிகரித்துள்ளமையைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான போராட்டங்களையும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம். – என்றார்.

இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் சுரேஷ் கங்காதரன், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர் எஸ். ஜேக்கப் ஆகியோர் உரை நிகழ்த்தியதுடன், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை மேல்மாகாணத்தில் அதிகரிப்பு

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சுகாதார பூச்சியியல் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அந்த சங்கத்தின் தலைவர் நிஜித் சுமணசேன குறிப்பிட்டுள்ளார்.

வீடுகள் மற்றும் சுமார் 20 லீத சுற்றுச்சூழலில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக நிஜித் சுமனசேன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலாவுக்குவந்த ஜேர்மன் பெண் மீது மசாஜ் நிலையத்தில் பாலியல் சேட்டை

## ஊழியர் ஒருவர் கைது

இலங்கைக்கு சுற்றுலா வந்த ஜேர்மனிய பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகக் கூறப்படும் மசாஜ் நிலைய ஊழியர் ஒருவரை கைது செய்துள்ளதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

இலங்கைக்கு சுற்றுலா வந்த ஜேர்மானிய பெண் ஒருவர் உனவட்டுன மாட்டரம்பவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சனிக்கிழமை மசாஜ் செய்து கொள்வதற்காக வந்துள்ளார்.

மசாஜ் செய்து கொண்டிருந்த ஊழியர் , பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக 65 வயதுடைய ஜேர்மன் பெண் ஹபராதுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய 45 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் சந்தேக நபரை காலி நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முடங்குவதற்கு இனி இடமளிக்கமாட்டோம்

## துறைமுக சேவைகள் தொழிற்சங்கம் அரசிடம் உறுதி

துறைமுக அதிகார சபையின் கீழ் பணி புரியும் இழுவை படகு மற்றும் சிறிய கப்பல் செலுத்துநர்களின் சங்க அதிகாரிகள் துறைமுக சேவைகளை முடக்குவதற்கு இனியொரு போதும் இடமளிக்கப்போவதில்லை என அரசாங்கத்திடம் துறைமுகசேவைகள் தொழிற்சங்கத்தினர் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில், கடற்படை தளபதி வைஸ் அத்மிரல் பிரியந்த பெரேராவின் பங்கேற்புடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு உறுதியளித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய துறைமுகங்களுக்கும் வருகை தரும் பெரும்பாலான கப்பல்கள் துறைமுகங்களின் முனையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றமை மேற்கூறப்பட்ட சிறிய கப்பல்களாலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், வெளித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்களின் கெப்டன்கள் மற்றும் பணியாளர்கள் சிறிய கப்பல்கள் மூலமே அழைத்து வரப்படுகின்றனர்.

கடந்த 15 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்த போராட்டத்தில் இந்த தொழிற்சங்கமும் கலந்துகொண்டமையால், அதன் பணிகள் கடற்படையினராலேயே முன்னெடுக்கப்பட்டன.

பின்னர் அவர்கள் மீண்டும் சேவைக்கு சமுகமளித்தமையையடுத்து, சாகல ரத்நாயக்க தொழிற்சங்கத்தினரை அழைத்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது வேலை நிறுத்தத்தால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு அவர்கள் கவலை வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர். தற்போது நிதி பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை வழங்க முடியாது என இதன்போது சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, மீண்டும் இந்த சேவைகள் முடங்கினால் அரசாங்கம் மாற்று வழியை நாடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட தொகையில் இந்தியக் கடன் செலுத்தப்பட்டது

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதற்கட்டமாகப் பெற்றுக்கொண்ட 330 மில்லியன் டொலரில், 121 மில்லியன் டொலர் இந்திய கடன் திட்டத்தின் முதற் தவணையை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

இவ்வாறு கடன் மீள் செலுத்தப்பட்டுள்ளமை, கடன் ஸ்திரத் தன்மையை பேணுவதற் உதவுவதோடு , எமக்கு உதவிய நாடுகளின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதில் சாதகமான தாக்கத்தை செலுத்தும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏனைய சந்தர்ப்பங்களில் சர்வதேசநாணயநிதியத்தின் கடனுதவி பெற்றுக் கொள்ளப்பட்டால் அது மத்திய வங்கியின் கையிருப்பில் காணப்படும்.

எவ்வாறிருப்பினும் இம்முறை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் தொகையை விசேட தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும். கடந்த வியாழனன்று முதற்கட்டமாக 330 மில்லியன் டொலர் கிடைக்கப் பெற்றது.

இதனை செலவிடும் போது மத்திய வங்கியுடன் பேச்சுகளை முன்னெடுத்து இணக்கப்பாடுகளை எட்ட வேண்டியுள்ளது.

கடன் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக இந்தக் கடன் தொகையைப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம். கடந்த காலங்களில் இந்திய கடன் திட்டத்தின்கீழ்நாம்பல்வேறுஉதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொண்டோம். அதற்கமைய இந்தியாவிற்குசெலுத்த வேண்டியுள்ள கடன் தொகையில் முதற் கட்டமாக 121 மில்லியன் டொலர் மீள செலுத்தப்பட்டுள்ளது.

இனிவரும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் , எமக்கு உதவியநாடுகளின்நம்பிக்கையைக் காப்பாற்றுதல் என்வற்றில் இது தாக்கம் செலுத்துகிறது.

நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுதொடர்பாகநாடாளுமன்றத்தில் பெரும்பான்மை விருப்பத்தைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இதன் போது சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தவும் , வாக்கெடுப்பில் பங்குபற்றவும் முடியும். தற்போதைய சூழலில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஏற்றுக்கொண்ட ஒரு விடயத்தை , தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எதிர்ப்பார்களானால் மிக இலகுவாக எதிர்க்கட்சிகளால் வரலாற்றில் இடம்பிடிக்க முடியும். – என்றார்.

# 20 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும் சம்பளம்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தகவல்



இலங்கையில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை தொழில் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், அடுத்த சில மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் இருபதாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இதன் மூலம் மேலும் பலர் வருமான வரி செலுத்துபவர்களாக மாறுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கால்கோல் விழா

*சாவகச்சேரி, மார்ச் 26*

*போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை காலை பாடசாலையில் இடம்பெறவுள்ளது.*

*பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தொடக்கக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும், கௌரவ விருந்தினராகலண்டனைச்சேர்ந்த நலன்விரும்பி சி.அமரசிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

# உரம் வழங்கும் வேலைத்திட்டங்களில் அரசு தலையிடாது என்கின்றார் சாகல



உரம் வழங்கும் வேலைத்திட்டங்களை அடுத்த வருடம் முதல் அரசாங்கத்தின் தலையீடு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்கவால் விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் மற்றும் கமநல சேவை ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பெரும்போகத்துக்குத் தேவையான அனைத்து வகை உரங்களை விநியோகிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உர விநியோகம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கம் தலையிடப் போவதில்லை என சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு உரத்தை வழங்குவதற்குத் தேவையான நிதி வழங்கப்படும் என்றும், அரசாங்கம் பெறுகின்ற வெளிநாட்டு உதவிகளை உரத்தை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி விலையைக் குறைக்க தலையிடுவதாகவும் சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அதற்கு மேல் உரம் வழங்குவதில் அரசாங்கம் தலையிடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரூபாவின் பெறுமதி அதிகரித்தல் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் விவசாயத்துக்கு வழங்கும் உதவிகளால் உரங்களின் விலை எதிர்காலத்தில் மேலும் குறையும் எனவும் அவர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரிகளின் நிலைப்பாடுளையும் கேட்டறிந்து கொண்டதன் பின்னர், அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் விவசாயிகளுக்கு உரங்களை வழங்குவதற்கான முறையான அமைப்பைத் தயாரிக்குமாறு சாகல ரத்நாயக்க அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைவரின் நோக்கம் என்ன?

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நிறுத்தியதன் பின்னர் அவற்றின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனியான குழு ஒன்றை நியமித்துள்ளார். தலைமை அமைச்சர் (பிரதமர்) தினேஸ் குணவர்த்தன தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதுபோன்றே மாகாண சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி சார்ந்து நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய ஒரேயொரு உறுப்பினர் வஜிர அபேவர்த்தன. அவரது தலைமையிலேயே மாகாண சபைகள் தொடர்பாக ஆராய்வதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதாவது அரசுத் தலைவருக்கு நெருக்கமான, விசுவாசமான, கட்சித் தலைமையின் சொற்படி கேட்டு நடக்கக்கூடிய ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதன் மூலம் அரசுத் தலைவரே இந்த விடயத்தைக் கையாளக்கூடியளவிற்கு நிலமைகள் நெருக்கமாகியுள்ளன.

அதுவும் மாகாண சபைகளுக்கான தேர்தலை திட்டமிட்டு நடத்தாமல் ஒத்தி வைத்தவர் அப்போது தலைமை அமைச்சராக இருந்தவரான ரணில் விக்கிரமசிங்கதான். தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக எழுந்த சிக்கல்களைக் காரணம் காட்டி பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு கிட்டதட்ட 4 ஆண்டுகள் கடந்த பின்னர் இப்போது அவற்றைக் கையாள்வதற்கு அவர் ஒரு குழுவை நியமிக்கிறார்.

அதுவும் ராஜபக்சக்களால் நியமிக்கப்பட்ட 9 மாகாணங்களின் ஆளுநர்களையும், பதவிக்கு வந்த உடனேயே மாற்றம் செய்வதற்கு விரும்பியிருந்த நிலையிலும் மாற்றம் செய்ய முடியாமல் இருக்கும் நிலையில் மாகாணங்களைக் கையாள்வதற்ககான குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதைப் போன்றே உள்ளூராட்சி சபைகளைக் கையாற்வதற்கான வேறு ஏற்பாடுகள் இருந்தபோதும் அவை அனைத்தினதும் லகான்களையும் கொழும்பின் கைகளில் வைத்திருக்கக்கூடிய வகையில் தலைமை அமைச்சரின் கீழ் மற்றொரு குழுவையும் அரசுத் தலைவர் நியமித்திருக்கிறார்.

இவையெல்லாம் ஏன்? மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கழுத்துக்களுக்குச் சுருக்குப் போட்டு அவற்றின் கயிற்றை நேரடியாகக் கொழும்பின் கைகளில் வைத்திருப்பதற்கு சர்வ அதிகாரங்களையும் கொண்டிருக்கும் அரசுத் தலைவர் ஏன் முற்படுகின்றார்?

சந்தேகம் எழுவது இயல்பானதுதானே? அனைத்து மக்கள் பிரதிநிதித்துவ சபைகளையும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு செல்லும் நடவடிக்கையே இது என்று குற்றஞ்சாட்டுகின்றன தேர்தல்கள் தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபடக்கூடிய குழுக்கள்.

இதன் மூலம் மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவை குற்றஞ்சாட்டியுள்ளன.

அவை சொல்வதிலும் நியாயம் இருப்பது போன்றே தோன்றுகின்றது. அரசமைப்பு வழங்கும் நிறைவேற்று அதிகாரங்களையும் தாண்டிய அதிகாரங்களையும் தனக்குள் சேர்த்துக்கொள்வதற்கு அரசுத் தலைவர் முற்படுகின்றாரா? அதன் மூலம் முழுமையான சர்வாதிகாரியாக முகிழ்த்தெழ அவர் முயற்சிக்கின்றாரா? சிந்திக்கவேண்டியதுதான்.

# போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்று வருமானத்தை தேடி ஓடுகிறார்கள்

### ஜேர்மனியில் அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு



சாவகச்சேரி, மார்ச் 26

கடந்த காலங்களில் போர் காரணமாக இடம்பெயர்ந்த எமது மக்கள் இன்று வருமானத்தைத் தேடி இடம்பெயர வேண்டிய தேவை ஏற்பட்டிருப்ப தாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

புலம்பெயர் மக்களுடைய தலைமுறைகளையும் - தாயக மக்களையும் இணைக்கும் செயற்திட்டம் ஒன்றின் கீழ் ஜேர்மனிக்கு பயணமாகி அங்கிருக்கும் தமிழ் உறவுகளைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் அரசியலைத் தாண்டி மொழி மற்றும் கலாசாரத்தால் ஒன்றுபடவேண்டும். எமது அடையாளமே இல்லாமல் போகக்கூடிய நிலை காணப்படுகின்றது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சனத்தொகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

1983இல் இருந்த மக்கள் தொகை 2010ஆம் ஆண்டில் இல்லை. 2010இல் இருந்த சனத்தொகை இன்று இல்லை.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 9ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்று சனத்தொகை இழப்பின் காரணமாக 7 ஆகக் குறைவடைந்துள்ளது.

முன்னர் போர் காரணமாக இடம்பெயர்ந்த எம் மக்கள் இன்று வருமானத்தை தேடி வெளி நாடுகளுக்கும்- கொழும் பிற்கும் இடம்பெயருகின்ற நிலை காணப்படுகிறது.

இலங்கையின் 25மாவட்டங்களில் முதல் 10 வறுமை மாவட்டங்களுக்குள் எமது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களும் உள்ளடங்குகின்றது.

வடக்கில் அதிக சனத்தொகையை கொண்ட யாழ்ப்பாண மாவட்டம் எட்டாவது வறுமை மாவட்டமாக காணப்படுகிறது. என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## சுவாமி விபுலானந்தர் பிறந்த நாள் விழா காரைதீவில் நாளை



(வி.ரி. சகாதேவராஜா)

சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணி மன்றமும் ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சுவாமி விபுலாநந்தரின் 131ஆவது பிறந்த தின விழா நாளை திங்கட்கிழமை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் நடைபெறவுள்ளது.

முதன்மை அதிதியாக இலங்கை கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து சிறப்பிக்கவிருக்கிறார். நினைவுப்பேருரையை தென்கிழக்கு பல்கலைக் கழக தமிழ் மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கி.இரகுவரன் நிகழ்த்தவிருக்கிறார்.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் பணிமன்றத் தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மின் பொதுமுகாமையாளர் ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் கலந்துகொண்டு ஆசி வழங்கவிருக்கிறார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம்,

கிழக்கு பல்கலைக்கழக கட்புல தொழில் நுட்ப கலைத்துறைத் தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம், கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி நிர்மலேஸ்வரி பிரசாந்த், சுவாமி விபுலாநந்த நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் க.பாஸ்கரன் ஆகியோரும் மற்றும் சிறப்பு சிறப்பு அதிதி கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## 14 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை இளைஞன் தலைமறைவு; பொலிஸ் தேடல்

தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 14 வயது சிறுமி மீது பாலியல் தொல்லை கொடுக்க முயற்சித்துள்ளார் இளைஞர் ஒருவர்.

இந்த சம்பவம் வவுனியா பாரதிபுரம் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

தனியார் வகுப்புக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குறித்த சிறுமி மீது இடைநடுவே இளைஞரொருவர் பாலியல் துன்புறுத்தலை மேற்கொள்ள முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து இந்த சம்பவம் தொடர்பில் சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

சிறுமியின் பெற்றோர் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டையடுத்து பொலிஸார் குறித்த சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்து மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

அத்துடன் குறித்த இளைஞரைத் தேடிச் சென்றபோதும் இளைஞன் தலைமறைவாகியுள்ளமை தெரியவந்துள்ளது. பொலிஸார் இளைஞனைக் கைது செய்ய வேண்டுமென கோரி, கிராம அபிவிருத்திச் சங்கம் மண்டபத்தில் பொதுமக்கள் ஒன்றிணைந்து பதில் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, தலைமறைவாகிய இளைஞரைக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக பொது மக்களுக்கு உறுதி வழங்கியதையடுத்து பொதுமக்கள் அங்கிருந்து சென்றனர்.

### மொறட்டுவையில் கற்று கனடாவில் வாழ்வோரால்

## காயத்ரி கிராமத்தில் வீடற்றவர்களுக்கு 25 வீடுகள் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு



(வி.ரி. சகாதேவராஜா)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 1989/1990 காலப்பகுதியில் கல்வி கற்று தற்போது கனடா மற்றும் இலங்கையில் வசிக்கும் நிதி வழங்குநர்கள் இணைந்து திருக்கோவில் -4 காயத்திரி கிராமத்தில் வீடற்ற 25 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து வழங்கவுள்ளனர்.

அதன் முதற்கட்டமாக 5 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில்

வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ் வீடுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வேண்டுகோளுக்கு அமைவாகக் கிடைக்கப்பெற்றன.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் க.சதீசேகரன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கந்தசாமி, நிதி வழங்குனர் சார்பில் சுபாசினி

கிரிதரன், சி.நந்தகுமார், திருக்கோவில்-4 கிராம உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலகத்தால் இலவசமாக வழங்கப்பட்ட காணிகளில் இந்த வீடுகள் அதத்துக்கொடுக்கப்படவுள்ளன.

## 202 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்







சாவகச்சேரி, மார்ச் 26

இணைந்த கரங்கள் அமைப்பின் ஊடாக சனிக்கிழமை காலை தேவைப்பாடுடைய 202 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி வைத்தியசாலையின் உதவி மருத்துவர் த.ஜெகதீஸ்வரன், மருதங்கேணி கோட் டக்கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஇராமச்சந்திரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நிதிப் பங்களிப்பாளர்கள் மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, தாளையடி மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள 9 பாடசாலைகளைச் சேர்ந்த தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

## ஹெரோயினுடன் இருவர் கைது

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதி மற்றும் மீசாலைப் பகுதிகளில் கஞ்சா பீடி மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் வியாழக்கிழமை பிற்பகல் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்தனர்.

இதன்போது ஒரு நபரிடம் இருந்து 28 மில்லிகிராம் ஹெரோயினும்-

மற்றைய நபரிடம் இருந்து கஞ்சா பீடியும் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெரிக்காவில் சூறாவளிக்கு இதுவரையில் 23 பேர் இறப்பு





அமெரிக்க நாட்டின் மிசிசிப்பி மற்றும் அலபாமா மாகாணத்தில் அதிசக்தி வாய்ந்த டொர்னாடோ சூறாவளி மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. 26 பேர் இதுவரை இந்த இயற்கை சீற்றத்தால் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்கிறார்கள் அதிகாரிகள்.

தேடுதல் மற்றும் மீட்புக் குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதியில் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படும் அதேநேரம் அந்த பகுதியில் இடியுடன் கூடிய மழை பொழிவு இருப்பதாகவும் தெரிகிறது.

வெள்ளிக்கிழமை பின்னிரவு நேரத்தில் இந்த பாதிப்பு ஏற்பட்டதாக தெரிகிறது. சுமார் 160 கிலோ மீற்றர் அளவுக்கு இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனை அந்த பகுதியின் அரசு மற்றும் அமெரிக்க நடுவண் அரசு உறுதி செய்துள்ளன.

மிசிசிப்பி மாகாணத்தின் சில்வர் சிட்டி பகுதியில் மீட்புப் பணிகள் நடந்து வருவதாக தகவல். இந்த சீற்றத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயரலாம் என மிசிசிப்பி மாகாண அவசரகால மேலாண் ஏஜென்சி அச்சம் தெரிவித்துள்ளது.

அதேபோல சுமார் 1,700க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் ரோலிங் ஃபோர்க் பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தகவல். இந்த சூறாவளியினால் தங்கள் வீடுகளில் மக்கள் சிலர் வெளிவர முடியாமல் சிக்கிக் கொண்டுள்ளனர் எனவும் தகவல். சமூக வலைதளங்களில் இந்த சீற்றத்தின் படங்கள் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

ரோலிங் ஃபோர்க் மிகப்பெரிய அளவில் பேரழிவிற்கு உள்ளாகி உள்ளது என யுனைடெட் கஜுன் கடற்படைத் தலைவர் டோட் டெரெல் தெரிவித்துள்ளார்.

மேலும், இதனை 2011இல் மிசோரி மாகாணத்தின் ஜோப்ளின் பகுதியில் ஏற்பட்ட சூறாவளி உடன் அவர் ஒப்பிட்டார். அப்போது ஏற்பட்ட பாதிப்பில் சுமார் 161 பேர் உயிரிழந்திருந்தனர்.

எம்எஸ் டெல்டாவில் உள்ள மக்கள் பலருக்கு உங்கள் பிரார்த்தனையும், கடவுளின் பாதுகாப்பும் தேவை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருத்துவ வசதியை போர்க்கால அடிப்படையில் வழங்கி வருகிறோம். தேடுதல் மற்றும் மீட்புப் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது என மிசிசிப்பி மாகாண ஆளுநர் ஜோனதன் டேட் ரீவ் தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் சூறாவளியின் பாதிப்பில் சிக்கிய இடங்களின் படங்கள் பகிரப்பட்டு வருகிறது. சில படங் களில் வீடுகள் இடிந்தும், கார்கள் திரும்பி நிற்பதையும் பார்க்க முடிகிறது. மக்கள் இடிபாடுகளில் இருந்து வெளிவரும் படங்களும் பகிரப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் கடைகளில் இனிமேல் காகித பற்றுச்சீட்டுக் கிடையாது

### நுகர்வோர் கேட்டால் மட்டுமே வழங்கப்படும்

(பாரிஸிலிருந்து குமாரதாஸ்)

கடைகளில் பொருள்களை வாங்குவோருக்கு அதற்கான பற்றுச்சீட்டைக் காகித வடிவில் உடனேயே அச்சிட்டுவழங்கும் தானியங்கி நடைமுறை பிரான்ஸ் நாட்டில் முடிவுக்கு வருகிறது.

வர்த்தகர்கள் இனிமேல் தங்களது வாடிக்கையாளர்களிடம் உங்களுக்கு அச்சிட்ட பற்றுச்சீட்டு வேண்டுமா என்று கேட்ட பின்னரே அதனை அச் சிட்டு வழங்கவேண்டும். அல்லது ஈமெயில் மூலமோ அல்லது குறுஞ்செய்தி போன்ற வேறு டிஜிட்டல் முறைகளிலோ அதை அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும்போது அதை உறுதி செய்யும் பற்றுச் சீட்டுக்களுக்கும் இந்தப் புதிய நடைமுறை பொருந்தும். கடைகளில் காசாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நன்கு புரியும் படியாக இதனைக் கேட்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் பரீட்சார்த்த அளவில் நடைமுறைக்கு வந்த இந்தப் புதிய ஏற்பாடு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கட்டாயமாக்கப்படுகிறது.

வீட்டுப் பாவனைப் பொருள்கள், கணினி உபகரணங்கள் போன்ற நீடித்த பாவனைப்பொருள்கள் என்ற வகைக்குள் அடங்கும் சில பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது விதிவிலக்காக அச்சிட்ட பற்றுச் சீட்டுகள் வழங்கப்படலாம். பொது நிர்வாக சேவைப் பிரிவின் சுற்றறிக்கையில் இது தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதிகரித்துவரும் காகிதப் பாவனையைப் படிப்படியாகக் குறைத்து முடிவுக்குக் கொண்டுவருகின்ற கழிவுக் குறைப்பு மற்றும் சூழலைப் பாதுகாக்கின்ற திட்டங்களின் அடிப்படையிலேயே பற்றுச் சீட்டு அச்சிடும் பாரம்பரியமும் நிறுத்தப்படவுள்ளது.

பிரான்ஸில் வர்த்தக நடவடிக்கைகளில் இந்தச் சிறிய பற்றுச் சீட்டுக்கள் ஆண்டு தோறும் சுமார் முப்பது பில்லியன்கள் என்ற எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. சேகரித்து மறு சுழற்சிக்கு உட்படுத்தக் கடினமான இந்தச் சிறு துண்டுக் காகிதங்கள் உடனேயே குப்பைக் கூடைகளுக்குள் மட்டுமன்றிக் கண்ட கண்ட இடங்களிலும் வீசப்படுகின்றன. அத்துடன் காகிதங்களில் உள்ள இரசாயனப் பொருள்கள் சுகாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன – என்று வர்த்தகத் துறை அமைச்சு தெரிவிக்கிறது.

புதிய நடைமுறை தங்களுக்குப் பல சிரமங்களை ஏற்படுத்தலாம் என்று நுகர்வோர் தரப்பில் கூறப்படுகிறது. தாங்கள் வாங்கும் பொருள்களது விலை விவரங்களை உடனேயே சரிபார்த்துக் கொள்வதற்குப் பற்றுச் சீட்டுகள் அவசியம் என்று பலரும் இந்த நடைமுறையை எதிர்க்கின்றனர்.

பொருள்களுக்கான பற்றுச் சீட்டை கைத்தொலைபேசிகளுக்கோ அல்லது ஈ–மெயிலுக்கோ அனுப்புவது தங்களுக்குத் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்றும் தொலைபேசி இலக்கத்தை அல்லது ஈமெயில் விவரத்தை வர்த்தகர்களுக்கு வழங்குவது அவர்கள் அதன் மூலம் தங்கள் விளம்பரப்படுத்தல்களைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் என்றும் அதேசமயம் தங்களது தனிப்பட்ட தரவுகள் திருடப்படுவதற்கும் அது வழியேற்படுத்தலாம் என்றும் பாவனையாளர்கள் தரப்பில் ஐயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### போதிய ஆயுதங்கள் இல்லாததனால்

## வலிந்து தாக்குதலை தொடங்க உக்ரைனால் முடியவேயில்லை

### அந்த நாட்டுத் தலைவர் இப்படிச் சொல்கிறார்



படையெடுத்து வரும் ரஷ்யாவுக்கு எதிரான வலிந்து தாக்குதல்களை உக்ரைனால் தொடங்க முடியவில்லை என்று அந்த நாட்டு அரசுத் தலைவர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார். ஆயுதங்களின் பற்றாக் குறையே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஓர் ஆண்டுக்கும் மேலாக உக்ரைன் நாட்டின் மீது ரஷ்ய போர் தொடுத்து வருகிறது. அதேவேளையில் நட்பு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் ஆயுதங்களைகொண்டு உக்ரைன் படைகளும் ஓர் ஆண்டாக ரஷ்ய படைகளை எதிர்த்து துணிவுடன் சண்டையிட்டு வருகின்றன.

ரஷ்ய படைகள் தற்போது கிழக்கு உக்ரைனில் உள்ள பக்முத் நகரைக் கைப்பற்ற தீவிரம்காட்டி வரும் நிலையில் அங்கு இருநாட்டு படைகளும் கடுமையாகச் சண்டையிட்டு வருகின்றன..

இதனிடையே ரஷ்யாவுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் எதிர் தாக்குதலை நடத்த உக்ரைன் தயாராகி வருவதாகவும், அதற்கு பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தகவல் கள் வந்த வண்ணம் உள்ளன.

எங்களால் இன்னும் தாக்குதலை தொடங்க முடியவில்லை. பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகள் இல்லாமல் எங்கள் துணிச்சலான வீரர்களை முன் வரிசைக்கு அனுப்ப முடியாது என ஜெலன்ஸ்கி கூறினார்.

மேலும் நட்பு நாடுகளிடம் இருந்து ஆயுதங்களை பெற காத்திருப்பதாகவும், நாட்டின் கிழக்கு பகுதியில் நிலைமை சாதகமாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## நியூயார்க்கில் 100 ஆண்டு காலப் பழைய பிரபல கட்டடம் ஏலத்தில் விற்பனை



அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 22 மாடிகளை கொண்ட 'பிளாடிரான்' என்ற வானளாவிய கட்டடம் உள்ளது. 1902ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கட்டடம் தன் மெல்லிய, முக்கோண வடிவத்திற்கு மிகவும் பிரபலமானது.

நியூயார்க்கின் அடையாளமாகத் திகழும் இந்த கட்டிடம் 2019ஆம் ஆண்டு முதல் வெறுமையாக உள்ளது. 100 ஆண்டுகள் பழமையான இந்த கட்டடம் பல்வேறு கைகளுக்கு மாறி இறுதியாக ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்றின் கைக்கு வந்தது.

அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் 'பிளாடிரான்' கட்டடத்தை ஏலம் விட முடிவு செய்தது. இதை தொடர்ந்து நியூயார்க்கை சேர்ந்த தனியார் ஏல நிறுவனம் கடந்த இரு தினங்களுக்கு முன் ஏலத்தை நடத்தியது. இதில் ஆபிரகாம் டிரஸ்ட் என்ற முதலீட்டு நிதியத்தின் சார்பில் ஏலத்தில் பங்கேற்ற அதன் நிர்வாகப் பங்குதாரர் ஜேக்கப் கார்லிக், 190 பில்லியன் டொலருக்கு 'பிளாடிரான்' கட்டடத்தை ஏலத்தில் எடுத்தார்.

## துனீசியாவில் படகு கவிழ்ந்தது 19 அகதிகள் கடலில் மூழ்கி சாவு



ஆபிரிக்க அகதிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த படகு ஒன்று துனிசியக்கடலில்கவிழ்ந்ததில் 19 பேர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஆப்பிரிக்க நாடான துனிசியாவில் இருந்து இத்தாலிக்கு புறப்பட்ட அகதிகள் படகே சனிக்கிழமை துனிசியா கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பச்சிளம் குழந்தைகள் உள்பட 34 பேர் மாயமாகினர். அவர்களில் 19 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். எஞ்சியவர்கள் படையினராலும் மீனவர்களாலும் காப்பாற்றப்பட்டனர்.

துனிசியாவில் கடந்த 2 நாட்களில் நடந்த 5ஆவது அகதிகள் படகு விபத்து இதுவாகும்.இதுவரையில்இந்தவிபத்துகளில் மொத்தம் 7 பேர் உயிரிழந்தனர். 67 பேர் மாயமாகி உள்ளனர். ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு போரால் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பலர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கிறார்கள்.

அவர்கள் கடல் வழியாகப் படகுகளில் செல்கிறார்கள். இதில் பல பயணங்கள் ஆபத்தில் முடிந்து விடுகின்றன. இருப்பினும் நாளுக்கு நாள் இவ்வாறு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2023 இல் வெளியிடப்பெற்றது.